



வாராந்த மின்னிதழ்

உண்மையின் முகம்

# கல்முனை NET e paper

kalmunainet.com






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

பிலவ வருடம் புரட்டாசி 16 (02.10.2021) இதழ் : 33


# கல்முனை வடக்கு பற்றி பேச வியாழேந்திரனுக்கு அருகதை இல்லை

## அரச அதிகாரத்தை வைத்து தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றவே முற்படுகிறார்

## தமிழர்கள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஹரிஸுக்கு கிடையாது!



(கேதீஸ்)

ஹரிஸ் எம். பி உள்ளிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பு ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்கின்ற பட்சத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை ஒரு இரவுக்குள் தரம் உயர்த்தி தர முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்து இருப்பது, எமது மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற செயலே ஆகும் என்று, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை கலையரசன் எம். பியை நாம் தொடர்பு

02

## 'தடுப்பூசி' எதிர்ப்பு வீடியோக்களுக்கும் youtube தடை

யூடியுப்நிறுவனம்தடுப்பூசிகளுக்குஎதிரான அனைத்து வீடியோக்களையும் தடை செய்ய விருப்பதாகத் தெரிவித்துள்ளது. தட்டம்மை, சின்னம்மை ஆகியவற்றுக்குப் போடப்படும் தடுப்பூசிகளுக்கு எதிரான வீடியோக்களும் அகற்றப்படவுள்ளன.

தடுப்பூசிகளுக்கு எதிரான பிரபல ஆர்வலர்களையும் யூடியுப் நிறுவனம் தடை செய்யும் என்று அந்த தளம் குறிப்பிட்டுள்ளது.

02

## கொரோனா மரணங்கள் சுமார் 13,000

### நேற்று 58 பேர் உயிரிழப்பு

## 42 நாட்களின் பின் அம்பாறை வழமைக்கு திரும்பியது

(எம். ஏ. ரமீஸ், ஹுனைப் எம். ஹனீபா)

கொரோனாத் தொற்று பரவலைத் கட்டுப்படுத்து முகமாக கடந்த ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் நாடு முழுவதும் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்கு தனிமைப்படுத்தல் சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து இன்று வெள்ளிக்கிழமை (01) அம்பாறை மாவட்டத்தில் மக்கள் வழமைக்கு திரும்பியுள்ளனர்.

அக்கரைப்பற்று, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நகரங்கள் வழமைக்கு திரும்பியுள்ளதோடு, நகரங்களுக்கு மக்கள் தங்களுக்குத் தேவையான அன்றாட அத்தியவசியத் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வருகை தந்திருந்ததைக் காண முடிந்தது.

அரச, தனியார் நிறுவனங்கள் உட்பட வங்கிகளும் வழமை போன்று

02





## இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம்:

### ஐ. நா மனித உரிமை பேரவை முன்பாக புலம்பெயர் தமிழர்களால் கண்காட்சி

ஜெனீவாவில் உள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு முன்னால் உள்ள மைதானத்தில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் ஏற்பாட்டில் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் அம்பலப்படுத்தும் வகையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சர்வதேச கண்காட்சி கடந்த புதன்கிழமை முதல் மூன்று நாட்கள் இடம்பெற்றது.

ஆப்கானிஸ்தான், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டம் ஆகியவற்றில் சீனாவின் ஆதிக்கம் எவ்வாறு கோலோச்சுகின்றது? என்பதை காட்டும் வகையில் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

02

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: பூஜித், ஹேமசிறிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெனாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று (01) கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் எடுத்தக்கொள்ளப்பட்ட போது, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெனாண்டோ மற்றும் முன்னாள்

02

## அரசியலுக்கு அப்பால் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அரசியலுக்கு அப்பால் மக்களின் தேவை நிறைவு செய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக முன்மொழியப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் (30) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதற்கு தலைமை தாங்கி

02

## எனது மகனை அடித்துக் கொன்ற பின்பே சுட்டுப் போட்டான்கள்

### இராஜாங்க அமைச்சரின் மெய்ப் பாதுகாவலரால் சுட்டு கொல்லப்பட்டவரின் தாயார் சாட்சியம்

(கனகராசா சரவணன்)

எனது பிள்ளையை அடி அடியென அடித்து கொன்று போட்டுசுட்டுப்போட்டான்கள்இந்தகொடுமையைக்கேட்க ஆளில்லையா? எங்களுக்கு நீதி வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்பாதுகாவலரால் படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் தயார் அதிர்ச்சி தகவலை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் எஸ.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் அவரது மெய்பாதுகாவர் மேற்கொண்ட துப்பாகி சூட்டு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மெய்பாதுகாவலின் வழக்கு விசாரணை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வீ.தியாகேஸ்வரன்

02

## கிழக்கு மாகாண மீனவர் சங்கங்கள் அமைச்சர் டக்ளசிடம் கோரிக்கை: நேரில் சந்தித்துப் பேச விருப்பம்

(சம்பூர் நிருபர் - பா.பிரியங்கன்)

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிழக்கு மாகாணத்துக்கு நேரில் வருகை தந்து மீனவ உறவுகளின் பிரச்சினைகளை செவிமடுக்க வேண்டும் என்று இம்மாகாணத்தில் உள்ள மீனவர் சங்கங்கள் கோரி உள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது, அவர் நேரில் வந்து பிரச்சினைகளை செவிமடுத்தால் நிச்சயம் உரிய தீர்வுகளை பெற்று தருவார், அவருடைய வருகைக்காக வழி மேல் விழி வைத்து காத்திருக்கின்றோம் என்று இச்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தார்.

02

## சம்மாந்துறை செங்கல் வாடியில் தீயில் கருகி ஒருவர் மரணம்

சம்மாந்துறையில் செங்கல் வாடியில் வேலை செய்து கொண்டிருந்த 49 வயது நபர் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகி இறந்த பரிதாப சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கரடியனாறை சேர்ந்த இவருக்கு வலிப்பு நோய் ஏற்படுவது வழக்கம் என்றும் எரிவாயு அடுப்பில் தேநீர் தயாரித்து கொண்டு இருந்தபோது இவர் வலிப்புக்கு உட்பட்டு நெருப்பில் சிக்கி இறந்தார் என்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வருகின்றது.

இவரின் உடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பிண அறையில் வைக்கப்பட்டு உள்ளது. இறந்தவருக்கு கொரோனா தொற்று உள்ளதா? என்று பி. சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

## கல்முனை வடக்கு பற்றி பேச...

கொண்டு கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது;

வியாழேந்திரன் கடந்த தேர்தல் காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல இடங்களுக்கும் வந்து மேடை பேச்சுக்களை மேற்கொண்டார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நிச்சயம் தரம் உயர்த்தி தரப்படும் என்று முழங்கினார்.

ஆனால், அவர் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக வந்த பிற்பாடு, ஒரு நாள்கூட இன்னமும் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தரவே இல்லை. அம்பாறை மாவட்டத்தில் உள்ள எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக எந்த அக்கறையையும் உண்மையில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.

எனவே, இவருக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவது தொடர்பாக பேசுவதற்கு உண்மையில் எந்த அருகதையும் கிடையாது. அது மட்டும் அல்லாமல் அவரின் கருத்து தொடர்ந்தும் எமது மக்களை ஏமாற்றுகின்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டையே காட்டுகின்றது.

கல்முனை தமிழர்கள் தொடர்பில் முடிவெடுக்கும் எந்த ஓர் அதிகாரமும் ஹரிஸுக்கு இல்லவே இல்லை.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தி தரப்படுவதற்கு ஹரிஸ் எம். பி உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்புதான் தடையாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

இப்படி இருக்க, ஹரிஸும், மு. காவும் பிரச்சினை இல்லை என்று சொல்கின்ற பட்சத்தில் ஒரு இரவுக்குள் தரம் உயர்த்தி தர முடியும் என்று வியாழேந்திரன் சொல்லி இருப்பது கேலி கூத்தும், பசப்பு வார்த்தையுமே ஆகும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினைக்கான தீர்வு, ஹரிஸ் எம். பி உள்ளிட்ட மு. கா தரப்பினரிடம்தான் உள்ளது என்றால் கடந்த காலங்களில் இவரும், அரசாங்கமும் எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் போலியானவை என்பதுடன் இவ்விடயத்தில் இவர், அரசாங்கம் ஆகியோரின் இயலாமையும் வெளிப்பட்டு நிற்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம், வெகுவிரைவில் வறிய மாவட்டமாக மாற கூடிய அபாயம் கண் முன் தெரிகின்றது. வரட்சியான மாவட்டமாக அது விரைவில் மாறும் என்று கவலைப்பட வேண்டி உள்ளது. ஏனென்றால், தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. மணல் கொள்ளைகள் அங்கு பரவலாக இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அங்கு உள்ள மக்களின் அன்றாட, அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை.

அரசாங்கம் மூலமாக தமிழ் மக்களுக்கு தீர்வுகளை பெற்று கொடுப்பார் என்று காட்டி கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர் வியாழேந்திரன். ஆனால், அவரால் எந்தவொரு சிறிய தீர்வைக்கூட மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களுக்கேனும் பெற்று கொடுக்க முடியாமல் உள்ளது என்பதே உண்மை நிலை ஆகும்.

குறுகிய சுய இலாப அரசியலையே வியாழேந்திரன் மேற்கொண்டு வருகின்றார். தேர்தல் மேடை பேச்சு போன்ற ஒன்றையே இப்போதும் நடத்தி இருக்கின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி பெற்று தருவதற்கு இதய சுத்தியுடன் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. நாம் காட்டி கொடுப்பவர்களோ கூட்டி கொடுப்பவர்களோ அல்லர்.

## ‘தடுப்பூசி’ எதிர்ப்பு...

கொரோனா தடுப்பூசிகள் பற்றி வெளியிடப்பட்ட பொய்த் தகவல்களில் மட்டுமே கவனம் செலுத்தி வந்ததால், அது குறித்து முன்கூட்டியே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று யூடியுப் குறிப்பிட்டது.

யூடியுபில் வெளியிடப்படும் தடுப்பூசிகளுக்கு எதிரான வீடியோக்கள் மீது

எந்த நடவடிக்கையும் எடுக்காதது குறித்து நிறுவனம் மீது பல ஆண்டுகளாகக் குறை கூறப்பட்டு வந்தது.

மக்களுக்கு தவறான தகவல்களை அளித்து தடுப்பூசி பெறுவதில் அவர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதற்கு சமூக ஊடகங்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்று கடந்த ஜூலை மாதம் குறிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

கொவிட்-19 தடுப்பூசி தொடர்பில் தவறான தகவல்களை பரப்புவதற்கான தடை அமுல்படுத்தப்பட்ட கடந்த ஆண்டு தொடக்கம் 130,000 வீடியோக்கள் அகற்றப்பட்டதாக கூகுள் உரிமை நிறுவனமான யூடியுப் தெரிவித்துள்ளது.

## 42 நாட்களின் பின் அம்பாறை...

இயங்கியதை காண முடிந்தது.

பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கான பொது போக்குவரத்துகள் வழமை போன்று இடம்பெற்றதுடன் உள்ளூர் போக்குவரத்துகான பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டன.

மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைப் பேணி கொள்வனவு செய்தனர்.

வர்த்தக நிலையங்களில் சமூக இடைவெளியை பேணும் முகமாக வர்த்தக நிலையங்களில் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்றங்களினால் வீதியோர வியாபாரங்கள் தடைசெய்யப்பட்டிருந்தது, உணவுப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை கண்காணிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் வர்த்தக நிலையங்களிலும், சந்தைகளிலும் கண்கானிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:...

ஐஜிபி பூஜித் ஜெயசுந்தர மீது சட்ட மா அதிபர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெந்திகே, மொஹமட் இர்ஷதீன் ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

போதுமான புலனாய்வு தகவல்கள் கிடைத்த போதிலும், கடந்த 2021 ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதன் மூலம் குற்றவியல் அலட்சியம் மற்றும் கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட 864 குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெனாண்டோ ஆகியோருக்கு எதிராக கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் 2 தனித்தனி வழக்குகள் சட்ட மாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாட்டாளர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் 1,215 பேரின் பெயர்களை சாட்சிகளாக சமர்ப்பித்தார்.

அதற்கமைய, குறித்த வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் நவம்பர் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அரசியலுக்கு அப்பால்...

உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், இன்றைய காலகட்டம் தேசிய அரசியலில் சவால் மிக்க ஒரு காலகட்டமாக காணப்படுகின்றனர். நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ச அவர்கள் எதிர்வரும் காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மிக நுட்பமான முறையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து வருகிறார்.

கல்முனைப் பிராந்தியத்தை பொறுத்தளவில் இங்கு முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் பிராந்தியதின் நலனுக்காகவும் பொது மக்களுக்குரியதாகவும் இருக்க வேண்டும். இங்கிருக்கும் அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மக்கள் பிரதிநிதிகளோடு இணைந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

பொது மக்களின் வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்ற போது, வேலைத் திட்டத்தை பூரணமாக நிறைவேற்றும் திட்டங்களா அமைய வேண்டும். அதேபோன்று அரச உத்தியோகத்தர்களும் அரசியல்வாதிகளும் இடைவெளிகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். இன்று பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எமது கல்முனை பிராந்திய ஆட்புல எல்லைக்குள் மக்களுக்கு பிரயோசனமான பணிகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதை தேசிய அரசியல் மற்றும் பிராந்திய அரசியலில் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டு முன் நோக்கி செல்கின்றோம். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எவ்வாறாயினும் அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமான விடயமாகும் என்று தெரிவித்தார்.

இதன் போது, பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 29 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் ஒரு பிரிவுக்கு 30 இலட்சம் ரூபா ஒதுக்கீடு என்ற அடிப்படையில் 29 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. இங்கு மேற்கொள்ளப்படவுள்ள உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

இதில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.ஜவ்பர், சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர். எம். சாலிஹ் உட்பட திணைக்களத்தின் தலைவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## எனது மகனை அடித்துக்...

முன்னிலையில் இன்று வெள்ளிக்கிழமை (01) எடுக்கப்பட்டு எதிர்வரும் 4ம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்காக படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் தந்தையான வேலுப்போடி மகாலிங்கம், தாயாரான மா. சின்னப்பிள்ளை நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.

ஒவ்வொரு வழக்கு விசாரணையின் போது மட்டக்களப்பு பொலிசார் பாக்க மாட்டினம் இதனை சிஜடியிடம் கொடுக்குமாறு நீதவான் தெரிவிக்கின்றார். ஆனால் அதற்கு பொலிசார் ஒரு பதிலும் கொடுக்கின்றார்கல் இல்லை இந்த ஆட்டோ காரன் தான் எனது பிள்ளையை கொலைக்கு கொடுத்தவன் அவனுக்கு எல்லாம் தெரியும் அவனை பிடிக்க வேண்டும்.

எனது மகன் படுகொலை செய்யப்படு இன்று 100 நாட்கள் கடந்துள்ளதாகவும் 8 வது தடவையாக வழக்கு தவணை போகின்றது பொலிசார் ஒன்றும் தெரிவிக்கவில்லை எறாவூர்பொலிசார்தலைமையில்விசாரணை இடம்பெறுகின்றது.

## இந்து சமுத்திர பிராந்தியத்தில்..

இந்து சமுத்திர பிராந்தியத்தில் உள்ள நாடுகளை சீனாவின் ஆதிக்கம் எவ்வாறு கட்டிபோட்டு வைத்திருக்கின்றது? என்பதை காட்டுவதே கண்காட்சியின் நோக்கமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிறைவு நாளான நேற்று வெள்ளிக்கிழமை ஐ. நா அதிகாரிகள் குழுவும் நேரில் சென்று கண்காட்சியை பார்வையிட்டதோடு, மேலதிக விளக்கங்களையும் கேட்டு தெரிந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண மீனவர்...

திருகோணமலை பட்டிணமும் சூழலும் மீனவர் சங்கத்தினர் கருத்து கூறுகையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மீனவர்கள் மூவர் சுமார் 05 மாதங்களுக்கு முன் கடலில் காணாமல் போய் உள்ளனர், அவர்களின் குடும்பத்துக்கு இன்னமும் எந்த தீர்வும் கிடைக்கவே இல்லை, உரிய தீர்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்று தர வேண்டும் என்று முக்கியமாக கோரினர்.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய மீனவர் சம்மேளனத்தின் தலைவர் நற்குணம் பத்மநாதன் கருத்து கூறுகையில் கொரோனா தொற்று பரம்பல் காலத்தில்கூட எமது மக்களுக்கு வேண்டிய மீன் உணவுகளை பெற்று கொடுத்த வண்ணம் உள்ளோம், ஆனால் எமது குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் இடர் கால நிவாரணங்கள் கிடைப்பதாக இல்லை, அமைச்சர் இதில் தலையிட்டு உரிய தீர்வை பெற்று தர வேண்டும் என்று கோரினர்.

அம்பாறை மீனவர் சங்கத்தினர் பேசுகையில் மீனவர்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொண்ட வண்ணம் உள்ளனர், சட்ட விரோத மீன்பிடி முறைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், மீனவர்களின் தொழில் துறைக்கு புதிய வசதிகள் ஏற்படுத்தி தரப்பட வேண்டும், மீனவர்களின் வாழ்வாதாரம், வருமானம் ஆகியவற்றை மேம்படுத்தப்பட வேண்டும், அனர்த்த கால நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தன.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## வீரியம் குறையும் வைரஸ்: மகிழ்ச்சி தரும் ஆய்வு

கருத்து, சற்று வித்தியாசமாக இருந்தாலும், நமக்கு இதுவும் ஓர் அதிர்ச்சி தரும் மகிழ்ச்சியான தகவலாகவே இருக்கின்றது.

டெல்டா திரிபினால் தினமும் ஏற்பட்ட உயிரிழப்புகள் நாட்டை அச்சத்தில் உறைய வைத்தது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் தினமும் ஐம்பதுக்கும் குறையாத மரணங்கள் சம்பவித்தன. அது கிடுகிடுவென அதிகரித்து தினமும் 200க்கும் மேற்பட்டோரை நாம் காவு கொடுத்தோம். டெல்டா ஓகஸ்ட் மாதத்தில் உச்சம் பெற்ற நிலையில், கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதியன்று மாத்திரம் 216 பேர் உயிரிழந்தனர். செப்டம்பர் 2ஆம் திகதி முதல் மரணத்தில் வீழ்ச்சி நிலை பதிவாகத் தொடங்கியது. இப்போது, 60க்கும் குறைவான உயிரிழப்புகள் தினமும் பதிவாகின்றன. இந்த விகிதம் பூச்சியத்துக்கு வருமாக இருந்தால், ஓரளவு நாம் காப்பாற்றப்பட்டோம் என்ற திருப்தியான நிலைக்கு வரலாம்.

ஆனால், அந்த நிலையை உருவாக்குவது நம்மைகையில் தான் இருக்கிறது.

சுகாதாரத்துறையின் அர்ப்பணிப்பான சேவையும் முப்படை, பொலிஸாரின் செயல்பாடுகளும் நூற்றுக்கு 150 வீதம் இருக்கிறது. அதனை கண்ணியத்தோடும் கட்டுப்பாடோடும் நாம் நடந்து கொள்வதில்தான் அனைத்துமே தங்கியிருக்கின்றது.

வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்வோம்...
கல்முனை NET e paper kalmunainet.com
2nd YEAR ANNIVERSARY

கல்முனை NET
kalmunainet.com
e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

ஆக்கத்திற்கான இயற்கை நிலை சோர்வு தலை காட்டாத ஊக்கத்தைக் கொடுக்கும். ஊக்கத்தின் அழிவுக்கான இயற்கைநிலை சோம்பலை ஏற்படுத்தும்.

# வீரியம் குறையும் வைரஸ்: மகிழ்ச்சி தரும் ஆய்வு

கொரோனா வைரஸ் பரவலின் வீரியமிக்க காலகட்டம் குறைவடைந்து வருவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வு பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர மகிழ்ச்சி தரும் தகவல் ஒன்றை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஆய்வு அறிக்கையை மேற்கோள் காட்டி கருத்து வெளியிட்ட அவர், ஒரு மோசமான நிலைமை நிறைவடைந் துள்ளதாக குறிப்பிடுகின்றார்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்வதன் ஊடாகவே கொரோனா பரவலை நிறைவுக்கு கொண்டுவர முடியுமென்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். அச்சத் திலும் வேதனையிலும் இருக்கும் உலகிற்கு இது ஒரு அறிவியல் தகவல் என்றே சொல்ல முடியும்.

இதேவேளை, டெல்டா திரிபினால் இலங்கையில் ஏற்பட்ட தொற்றுக்களும் மரணங்களும் குறைந்து வருகிறதென்ற செய்தியும் கொஞ்சம் மன நிம்மதியை தருகிறது. இந்த நிம்மதி நீடித்து நிலைக்க வேண்டும் என்பதே அனைவரி னதும் ஆத்மார்த்த பிரார்த்தனை.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றுக்குகிடைத்த பெறுபேறுதான் இது என்று அடித்துக் கூறலாம். நாடு சுமார் ஒன்றரை மாதங்களாக முடக்கப்பட்டு இருந்தாலும், ஒவ்வொருவரின் பங்களிப்பும் இல்லாமல் இது சாத்தியமாகி இருக்காது.

டெல்டாவின் வீரியம் சுகாதாரத் துறைக்கும் ஒவ்வொரு பிரஜைக்கும் பாரிய அச்சுறுத்தலாக இருந்தது. பிணக் குவியல்கள், ஆஸ்பத்திரி பிரேத அறைகளில் நிரம்பி வழிந்த போது, நாடு கேள்விக்குறியானது. யுத்தத்தை விடவும் மிக மோசமான நிலையில் நாடு இருந்தது.

என்றாலும், மக்கள் மத்தியில் இப்போது ஒரு புது நம்பிக்கை பிறந்திருக்கிறது போல், தெரிகிறது. இந்த நம்பிக்கை வீண் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்கையில்தான் இருக்கிறது.

அரசாங்கம் சட்டங்களை போடலாம். மருந்துகளையும் தடுப் பூசிகளையும் மருத்துவ உப கரணங்களையும் தருவித்துக் கொடுக்கலாம். ஆனால், இவைகள் அனைத்தையும் பூரணத் துவமாக்கும் பொறுப்பு, ஸ்ரீமான் பொது ஜனங்களிடம்தான் இருக்கிறது.

ஊரடங்குச் சட்டம் என்பது பெயரளவில் தான் இருக்கிறது. கடைகள் பூட்டி கிடந்தாலும் வீதிகள் வழமை போன்று தான் நெரிசலாக காணப்படுகின்றன. அத்தியாவசியப் பொருள் கள் கொள்வனவுக்கு அனுமதி வழங்கியிருப்பதை தவறாக பயன்படுத்துபவர்கள் ஏராளம். சமூக இடைவெளி என்பது என்ன விலை? என்று கேட்கும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

முகக் கவசம் அணிவதிலும் அலட்சியமாகவே பலர் செயல் படுகிறார்கள். முகக் கவசமும் சமூகக் இடைவெளியும் நம்மையும் நம் சமூகத்தையும் பாதுகாக்கும் பேராயுதம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

உயிரிழப்புகள் குறைந்து விடுகிறது என்பது நமக்கு கிடைக்கும் சுதந்திரம் என்று, நினைத்து விடாதீர்கள்.

அபாயம் இன்னும் குறைந்துவிடவில்லை. டெல்டாவுக்கு நாம் கொடுத்த விலை அதிகம். இப்போது, ‘A. Y 28’ என்ற உப பிரிவு உருவாகியிருப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ நிபுணர்கள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டு இருக்கின்றார்கள். இது ஐந்தாவது அலையாகக் கூட உருவெடுக்கலாம். சில வேளைகளில் டெல்டாவை விஞ்சிய தாக்கத்தையும் ஏற்படுத்திவிடலாம்.

ஆகவே, அபாயம் இன்னும் நம்மை சுற்றிக்கொண்டே இருக்கிறது.

இந்த நிலையில், கொரோனா பாதிப்பின் வீரியம் மிக்க காலகட்டம் நிறைவுக்கு வருவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வைத்திய நிபுணர்கள் தெரிவித்திருக்கும்

மிகுதி 2ஆம் பக்கம்




# முதியோர் இல்லங்கள் முற்றாக ஒழிய வேண்டும்

முதியோரும் சிறுவர்களும் தான் உலகின் பெரும் பிரச் சினைகளை எதிர்கொள்பவர்களாக இருக்கிறார்கள். சமூகத்தை உருவாக்கி ஆளாக்கும் மூத்த குடிமக்கள் இன்று அனாதை மடங்களிலும் முதியோர் இல்லங் களிலும் வாழ்வையும் நம்பிக்கையையும் இளந்து தவிக்கின்றார்கள்.

அதேபோல, எதிர்கால சமூகமும் தலையெடுக்க முடி யாமல் அளிக்கப்படும் பரிதாப நிலையும் உலகில் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இந்த மூத்த குடி மக்களையும் எதிர்கால சந்ததியையும் பாதுகாக்கும் விழிப்புணர்வு தினமே நேற்று ஒக்டோபர் 1ஆம் திகதி உலக முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆம், சர்வதேச முதியோர் தினம் மற்றும் சர்வதேச சிறுவர் தினம் நேற்று ஆகும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு உட்பட உலகம் முழுவதும் முதியவர்களின் வாழ்வு கேள்விக்குறியாகி இருக்கிறது.

வடக்கு, கிழக்கில் இன்று முதியோர் இல்லங்களும் அனாதை மடங்களும் அதிகரித்து காணப்படுவதனை பார்க்கும்போது நிலைமையின் பரிதாபம் நமக்கு புரிகிறது.

*Global Age Watch* என்ற அமைப்பு உலகில் 96 நாடுகளில் நடத்திய ஆய்வில், முதியோர் வாழ தகுதி உடைய நாடுகள் பட்டியலில் இலங்கை நாற்பத்தி எட்டாவது இடத்திலும் இந்தியா 69ஆவது இடத் திலும் இருக்கின்றன.

குடும்ப பண்பாட்டில் சிறந்தது எனப் போற்றப்படும் இந்த இரு நாடுகளும் இந்த நிலையில் இருப்பது உலகில் கவலைக்குரிய விடயமாகும்.

ஐக்கிய நாடுகள் சர்வதேச முதியோர் தினம் *(International Day of Older Persons)* உலகம் முழுவதும் ஒக்டோபர் 1 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. 1991 ஆம் ஆம் ஆண்டில் இருந்து இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதிலும் உள்ள மூத்த குடிமக்களை மதிக்கவும், மரியாதையை செலுத்தவும், குடும்பம், சமூகம் மற்றும் நாட்டுக்கு அவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவு கூறும் வகையிலும், அவர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் சாதனைகளை பார்த்துக் கற்றுக்கொள்ளவும் மக்களுக்கு எடுத்து ரைக்கும் நாளாக காணப்படுகிறது.

பொதுவாக 60 வயதை கடந்த ஆண், பெண் அனைவரும் மூத்த குடிமக்கள் அல்லது முதியோர் என்று கருதப்படுகின்றனர். அவர்கள் நலனை பாது காக்கவும், அவர்களின் உரிமைகளை மதிக்கவும் அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின் றன. 1991 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் அவை அறி வுறுத்தலின் படி, முதியோர்களுக்கான அத்தியாவசிய விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக குடும்பத்திற்கு தூண்களாக இருந்து பெரும் ஆதரவு தந்து வந்தவர்கள் இன்று அவர்களில் சிலர் குழந்தைகளின் ஆதரவு இல்லாமல் பெரும் சிரமத் தில் இருக்கின்றார்கள். இவர்களில் ஒரு தொகுதியினர் நோய்களால் பாதிக்கப்பட்டு அதன் செலவுகளை சமா ளிக்க முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இன் னொரு தொகுதியினர் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பிவிட்டு தனிமையில் வாழ்பவர்களாக உள்ள னர். இன்னும் சிலர் பிந்திய திருமணப் பிள்ளைப் பேற்றின் காரணமாக வாழ்க்கை செலவுகளை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றனர். இன்னும் சிலர் பெற்றோரை பராமரிக்க முடியாது முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை பெற வருடாவருடம் உயிருடன் இருப்பதனை உறுதி செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

முதியோர்கள் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தம் முடன் நேரம் செலவழிப்பது குறைவாக உள்ளதென குறிப்பிடுகின்றார். இதனடிப்படையில் அன்புத் தேவையை எதிர்பார்க்கும் உளநிலை உடையவர்களாக இருப்பதனை அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. முதியோர்களில் 56.66 வீதமான முதியோர்கள் அதிகள விலான நேரத்தினை தனிமையில் கழிப்பவர்களாக உள்ளனர். இதனால் தமது ஆசைகள், ஏக்கங்களை பிள்ளைகளுக்கோ, பேரப்பிள்ளைகளுக்கோ அல்லது ஏனைய உறவினர்களுக்கோ தெரியப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை அதிகளவில் இழந்தவர்களாக காணப் படுகின்றனர். இவற்றுடன் முதியவர்களில் பெரும்பாலா னோர் வாழ்க்கை துணையினை இழந்தவர்களாக இருப்பதனாலும் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

இதனால் உள அழுத்தங்களுக்குட்பட்டிருப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

அது என் நேரம், 43.34 வீதம் முதியவர்கள் தமது பேரப்பிள்ளைகளுடன் தமது நேரத்தை செலவழிப் பதனால் தாம் மகிழ்ச்சியுடன் இருப்பதாக குறிப்பிட்ட தனடிப்படையில் இவர்கள் தமது உறவினர்களுடன் நேரம் செலவழிப்பதனை விரும்பும் மனநிலை உடையவர் களாக இருப்பதனையும் கண்டறியக் கூடியதாக உள்ளது.

ஆகவே, மூத்த குடிமக்களின் நலன் பேணுவோம். அவர்களை நம்மில் ஒருவராக பாதுகாப்போம்.

# பிஞ்சு உள்ளங்களை கருக்கி விடாதீர்கள்

சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் அவர் களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடனும் அவர்களுக்கென்று ஒரு தினமும் வகுக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. அதுதான் சர்வதேச சிறுவர் தினமாகிய ஒக்டோபர் 1ஆம் திகதியாகும்.

1954ஆம் ஆண்டில் சிறுவர் தினம் சர்வதேச ரீதி யாக கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா வலியுறுத்தியது. 18 வயதிற்குக் குறைந்த சகல ரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி சர்வதேச ரீதியில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட சிறுவர் உரிமை பிரகடனத்தில் 1991ஆம் ஆண்டு இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றிலொரு பகுதி யினர் சிறுவர்களாக காணப்படுகின்றனர் எனக் கூறப் படுகின்றது. சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களது கருத்துக்களுக்கு செவிசாய்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுப் பதில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களின் பங்கினை மறுப்பதற்கில்லை.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் 2008 ஜூன் மாதம் 12ஆம் திகதி சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. சிறுவர்கள் ஒரு நாட்டினதும் ஒரு சமுதாயத்தினதும் அச்சாணி என் பது நாம் அறிந்த விடயம். ஒரு சமூகத்தினது தூண்களா கவும் ஒரு நாட்டினது முதுகெலும்பாகவும் செயற் பட இருப்பவர்களும் இவர்களேதான். இவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்டு நல்வழிப்படுத்தப்படு வார்களேயானால் அந்த சமூகம் அந்த நாடு தலை நிமிர்ந்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகள் சர்வதேச சிறுவர் தினமா கிய அக்டோபர் 1ஆம் திகதியே நினைவு கூரப்படு கின்றன. சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமை களாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை பின்வருமாறு அமைகின்றன.

* வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை.




தொடர்ச்சி 07ஆம் பக்கம்...

# சூம் கிளாஸ் பெற்றோருக்கு எச்சரிக்கை



**சப் – இன்ஸ்பெக்டர் எல்.சுசீலா**
**மட்டக்களப்பு மாவட்ட பெண்கள், சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரி**

நேர்காணல்
கனகராசா சரவணன்

**உலகம் முழுவதும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மட்டுமல்ல அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிலும் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களும் வன்முறைகளும் தொடர்ந்த வண்ணமே ,ருக்கின்றன. நமது நாட்டிலும் இந்த சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களும் வன்முறைகளும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இருந்தபோதும், நாடு முழுவதுமாக தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நிலைமையிலும் மனிதாபிமானமற்ற முறையில் இந்த நிலை அதிகரித்துச் செல்வது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.அதிலும், பாடசாலை மாணவிகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.**

**தற்போது கொரோனா தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில்,மாணவர்கள் தனியார் மற்றும் பாடசாலைகள் ஊடாக கணணி தொழில்நுட்பத்தின் ஊடான, நிகழ்நிலை கல்வி கற்பித்தல் முறை மூலம் (சூம் கிளாஸ்) பாடசாலை மாணவிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ,லக்காகுவதாக பல மாணவிகள் பொலிஸில் முறைப்பாடு செய்திருப்பது தெரிய வருகிறது.**

**இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பெண்கள்,சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எல்.சுசீலா சிறப்பு பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிராக எவ்வாறான பாலியல் துஷ்பிரயோகம் ,டம்பெற்று வருகின்றன..?

தற்போது கொரோனா காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்களுக்கு ஒன்லையின் மூலமாக கையடக்க தொலைபேசியில் சூம் ஊடான வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில், சில மாணவிகள் இந்த நிழல்நிலை கல்வி என்ற சூம் ஊடாக, கல்வி கற்கும் நேரத்தில், கல்வி கற்பதாக பெற்றோருக்கு பாசாங்கு காட்டிக்கொண்டு காதலில் தொலைபேசி ஊடாக ஈடுபடுகின்றனர். இந்த காதல் வலையில் சிக்கிய சில மாணவிகள், காதலனின் ஆபாச கதைகளை நம்பி, தங்களது அந்தரங்க உறுப்புக்களை காட்டும் நிலை உருவாகி ,ருக்கிறது. ,தன்போது, காதலன் இவர்களுக்கு தெரியாமல் ஸ்கிரீன் சொட் முறையில் படம் எடுப்பது மாணவிகளுக்கு தெரியாமல் இருக்கிறது.

இதன் பின்னர், எடுக்கப்பட்ட படங்களை வைத்துக்கொண்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு அழைப்பதும், மாணவிகளை அச்சுறுத்தி பணம் வசூலிப்பதும் அம்பலத்துக்கு வந்திருக்கிறது. இந்த காதல் என்ற பொறிக்குள்,மாணவிகள் மட்டுமல்ல 18 வயதுக்கு மேற்பட்ட யுவதிகளும் சிக்குண்டு பரிதாப நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக பாதிக்கப்பட்ட சில மாணவிகள்,பொலிஸ் நிலையங்களிலுள்ள, பெண்கள்,சிறுவர் பிரிவுகளிலும். மாவட்ட பெண்கள் சிறுவர் பிரிவிலும் முறைப்பாடுகள் செய்துள்ளனர். சிலர், பொலிஸ் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணைகள் என பயந்து முறைப்பாடுகளை செய்யாது ஆலோசனைகளை பெற்றுச் செல்கின்றனர். ,ந்த மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, பிறமாவட்டத்தை சேர்ந்தவர்களும் எம்மிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் .

அவ்வாறே 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் பெண்கள் சிலரும், இதே பாணியில் சிக்கி பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக எவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன?

இந்த மாவட்டத்தில் 12 பொலிஸ் நிலையங்கள் ,ருக்கின்றன.அங்கு பெண்கள் சிறுவர்கள் என்ற தனிப் பிரிவு இயங்கிவருகின்றது.,ந்த நிலையில் 12 பொலிஸ் நிலையங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில்,மாவட்டத்தில் கடந்த 2019-01-01 தொடக்கம் 2020-12-31 வரை சிறுவர்களுக்கு எதிராக 67 பெரும் குற்றங்களும், 2020-01-01 தொடக்கம் னைகள் காரணமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 2019 -01-01 தொடக்கம் 2019-12-31 வரை 3672 முறைப்பாடுகளும், 2020-01-01தொடக்கம் 2020-12—31 வரை 3492 முறைப்பாடுகளும் 2021-01-01- தொடக்கம் 2021-8-31 வரை 2202 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. ,ந்தப் புள்ளிவிவரங்களை பார்க்கின்ற பொழுது, சிறுவர் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பாலியல் துஷ்பிரயோகங்களும் அதிகரித்திருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பாக மாணவிகள் மற்றும் பெண்கள் பெற்றோருக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

முதலாவதாக ,ந்து சூம் ஊடான கையடக்க தொலைபேசியில் கல்வி கற்பிக்கும் போது பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளைகள் அருகில் உள்ளீர்களா? என கேட்கவேண்டியுள்ளது. ஏன் என்றால் ஒரு சில மாணவிகள் ,ந்த சூம் ஊடான கல்விகற்றல் என்ற போர்வையில் காதல் வலையில் சிக்கி காதலனுக்கு தமது அந்தரங்க உறுப்புக்களை காட்டுகின்றனர். இது ஒருசில பெற்றோருக்கு தெரிவதில்லை. எனவே, பெற்றோர், பிள்ளைகளை சூம் வகுப்பின் போது நன்கு கண்காணிக்க வேண்டும்.

**கயவர்களிடமிருந்து மாணவிகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள்**

இரண்டாவதாக, பெற்றோர் விரும்பினால் தங்களின் பிள்ளைகளுக்கு தங்களின் பெயரில் சிம் அட்டைகளை பெற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு கொடுக்கும் போது அந்த சிம் அட்டையில் தங்களின் சிம் அட்டை ,ணைப்பை ஏற்படுத்த முடியும். அதனை குறித்த சிம் அட்டை பெறும் நிறுவனத்தில் தெரிவித்து ஏற்படுத்த முடியும். ஆனால், ,ந்த முறையை ஒரு சில பெற்றோர் மட்டும் செய்கின்றார்கள்.

அது மட்டுமல்ல, தங்களின் பிள்ளைகளை தனிமையில் எங்கும் அனுப்பாதீர்கள். அவ்வாறு அனுப்பும் போது,பிள்ளையின் பாதுகாப்பு போன்ற விடையங்களில் கவனம் செலுத்தவும். அவ்வாறு பிள்ளைகளை பெற்றோர்கள் தொடர்ந்து அவதானித்து கொள்வதன் மூலம் பிள்ளைகள் தவறான விடையங்களில், செல்வதை முன்கூட்டியே தடுக்கமுடியும்.

ஆனால், சில பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் செய்யும் தவறுகளை தெரிந்தும் தெரியாத மாதிரியுள்ளனர். அதனால், அவர்கள் மீளமுடியாத தவறில் வீழ்ந்த பின்தான் எங்களிடம் கூறுவார்கள். எனவே, ஒரு தவறு இடம்பெற்று முடிந்த பின் என்ன செய்யமுடியும். இதனை பெற்றோர்கள் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்யமுடியுமா? அவ்வாறே தான் எமது பிள்ளைகள் தவறு ஒன்றில் வீழ்ந்த பின் என்ன செய்யமுடியும்.

எனவே, பெற்றோராகிய நீங்கள் பிள்ளைகளை அவதானித்து வருவதன் மூலமாக பிள்ளைகள் தவறாக நடக்க முன்னர் அதனை தடுக்க முடியும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாத்தறை மாவட்டத்தில், ,ணையவழி கற்பித்தலில் ஈடுபட்ட 18 வயது யுவதி ஒருத்தி,15 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் பதிவாகி ,ருப்பது கவலைக்குரிய விடயம். இருந்தபோதும், ஏன் ,து நடந்தது.இந்த இணையவழி கல்வியில் பிள்ளைகள் கற்பதாக பெற்றோர் கவனியாது ,ருந்துள்ளனர்.ஆனால் பிள்ளை கல்வி கற்பதாக ஆபாச தளங்களை பார்வையிட்டதால் இந்த விபரீத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால், இந்த இரு குடும்பங்கள், அவர்களது சகோதர சகோதரிகள், பெற்றோர் உட்பட உறவினர்கள் ,தனால் அவமானம் அடைந்துள்ளதுடன் கௌரவம் பாதிக்கப்பட்டு கண்ணீர்வடிக்கின்ற நிலமை ஏற்பட்டுள்ளது. எனவே ,வ்வாறான நிலைமையை உணர்ந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும்.

அதேவேளை, தெரிந்தோ தெரியாமலோ மேலே கூறிய தவறுகள் இடம்பெற்று அதில் ,ருந்து மீளமுடியாத நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறானவர்கள் வெட்கமோ பயமோ இன்றி பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் (என்னோடு ) தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி ,லக்கமான 0776574861 அல்லது 0759329812 என்ற எண்ணுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும். நாங்கள் அதற்கான உரிய பாதுகாப்புடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை கண்டிப்பாக எடுப்போம்.

# முஸ்லீம் சமூக அரசியல் சாத்தியப்படும் காலம் இதுவல்ல



## வன்னி மாவட்ட பொது ஜன பெரமுன எம்பி காதர் மஸ்தான்

**கட்சி, அரசியல், இன பாகுபாடுகளில் லாமல் வன்னி மாவட்டத்தில் சேவை செய்யும் சூழல் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர்மஸ்தான் தெரிவித்தார்.**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டுத் தெரிவான ஒரேயொரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரான காதர்மஸ்தான் எம், பி கல்முனை நெற் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புப் பேட்டி.**

**உங்களது அரசியல் பிரவேசம் பற்றி சுருக்கமாக விளக்குங்களேன்.?**

நல்லாட்சியைக் கொண்டு வந்த 2015 ஆம் ஆண்டு,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்ற த்துக்குத் தெரிவு செய்யப்பட்டேன். இனங்களைப் பிரநிதித்துவப்படுத்து வதிலும் பார்க்க மக்களைப் பிரதிநிதி த்துவம் செய்வது எனக்குச் சுகமாக இருக்கிறது.இனங்கள் எனும்போது தமிழ்,சிங்களம்,முஸ்லிம் என மக்களை வகைப்படுத்தும். இவ்வாறில்லாமல் சகலரையும் இணைத்த மக்கள் கூட்டத்தையே நான் பிரதிநிதிப்படுத்துகிறேன்.இதனால், நம்பிக்கையுடன் எனது அரசியல் பயணமும் தொடர்கிறது.

**நல்லாட்சிக்குப் பின்னர் நடந்த,ஜனாதிபதி 2019, பாராளுமன்ற 2020 தேர்தல்களின்போது, சிறுபான்மைச் சமூகங்களின் நிலைப்பாடுகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிரானதாக இருந்ததே!எப்படி உங்களால் இந்தக் கட்சியை ஆதரிக்க முடிந்தது?**

கட்சி அரசியலைக் கடந்து என்மீது நம்பிக்கை வைத்த மக்களை நான்,ஒன்றுதிரட்டினேன்.வன்னி மாவட்டத்தைப் பொறுத்தளவில் உரிமை அரசியலிலும் பார்க்க அபிவிருத்தி அரசியலே அவசரப்பட்டிருந்தது.எனவே,வெல்லப்போகின்ற வேட்பாளரையும் அரசாங்கம் அமைக் கவுள்ள கட்சியையும் ஆதரிக்குமாறு வேண்டினேன். என்னை நம்பிய மக்கள் வாக்களித்தனர்.

> **பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கூடுதல் ஆர்வம்**

**அபிவிருத்திகள்தான் அவசி யப்பட்டது என்று சொல்கிறீர்கள். வெற்றி பெற்று எம்.பியாகி மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் உள்ள உங்களால,இதுவரை எதைச் செய்ய முடிந்தது.?**

மீள் குடியேற்றமும்,வாழ்வாதாரமும்தான், வன்னி மாவட்டத்துக்கு அவசியமாகத் தேவைப்படுபவை. போரினால் ஏற்பட்ட அழிவுகளைச் சரி செய்வதற்கு இந்த அரசாங்கம் அதிகளவில் முயற்சிக்கிறது. போதுமான நிதிகளும் ஒதுக்கப்படுகி ன்றன.வீடுகளை நிர்மாணித்தல், வீதிகளைச் செப்பனிடல், தொழில்வாய்ப்புக்களை வழங்குதல்,விஷேடமாக பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு உதவுதல்,என்பவையே, எனது பிரதான பணிகளாகும். இந்தப் பணிகளில்,பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதில்தான் சிக்கல்கள் அதிகமாக உள்ளன. கால்நடைவளர்ப்பு,பண்ணை வளர்ப்பில் ஈடுபடும் பெண்கள் அதிகமான நேரத்தை செலவிடுவதால்,பிள்ளைகளைப் பராமரிப்பதில் நேரமின்றி உள்ளனர்.இதனால், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பதுதான் கவலையளிக்கிறது.

**விரைவில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படும் அமைச்சரவை மாற்றத்தில்,உங்களுக்கு ஏதாவது பதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறீர்களா?**

இதுவரைக்கும் இந்தச் செய்திகள் ஊகங்களாகத்தானுள்ளன.அவ்வாறு,மாற்றங்கள் இடம்பெற்றால் இதுபற்றி கட்சி சிந்திக்கட்டும். பதவிகள் இல்லாவிட்டாலும்,எனது மக்களுக்கு எதையாவது செய்வதற்கு இந்த அரசாங்கம் உதவுகிறதே!

> **இனங்களை பிரதிநிதித்துவம் செய்வதிலும் பார்க்க மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதே சிறந்தது**

**முஸ்லிம் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் இணைவதற்கு அழைப்பு வந்தால் இணையும் எண்ணங்கள் ஏதும் இருக்கிறதா?**

எனக்கு வாக்களித்த மக்கள்தான் இதைப்பற்றித் தீர்மானிப்பர்.சமூக அரசியல் சாத்தியப்படும் காலம் இதுவல்ல. சகலரையும் இணைக்கும் அரசியலே சாத்தியப்படும்.இனம்பா ர்த்து,கட்சி பார்த்து அரசியல் செய்யும், கலாசாரம் வன்னியில் மறைந்து வருவதாகவே நான் உணர்கிறேன். மீன்பிடி,விவசாயம்தான் இந்த மாவட்டத்தின் பிரதான தொழில்கள். மண் வளம்,கடல் வளத்தைப் பாதுகாப்பதில்தான்,இம்மக்களின் வாழ்வாதாரம் தங்கியுள்ளது. பாதுகாப்பு படையினரிடம் இதுபற்றிப் பேசி,பாதுகாப்புக் காரணங்களுக்கா க விதிக்கப்பட்ட தடைகளை அகற்றவும் ஆலோசித்தும் வருகிறோம்.

**பேட்டி கண்டவர் – முயலகன்**





# மட்டக்களப்பின் பூர்வக்குடிகள் யார்?



-சஞ்சீவி சிவகுமார்-

மட்டக்களப்பின் வரலாறு குறித்து பேசும் பல்வேறு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. கல்வெட்டுகளும், செப்பேடுகளும், ஓலைக்குறிப்புகள் பலவும் இந்த வரிசையில் வந்து நிற்கின்றன. அவை ஒன்றையொன்று முற்றாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வெட்டியும் ஒட்டியும் நீண்டு செல்லும் ஒரு தொடர்ச்சி போன்ற பாவனையை நமக்குத் தருகின்றன. இந்த நூல்களின் நிரூபிப்புகள் பொதுவாக மட்டக்களப்பில் பூர்வக் குடிகளாக இயக்கர்கள், நாகர்கள் என்பதையே முன்னுரிமைப்படுத்திப் பேசுகின்றன. அதனூடாக நாகர்களே திராவிடர்கள் என்ற கருத்தியலும் ஊன்றி நிற்கச் செய்யப்படுவதுண்டு. பாளி, பௌத்த வரலாற்று நூல்களின் விவரிப்புகளான 'இயக்கர், நாகர்கள் மனித வம்சமே அல்ல, அவர்கள் அமானுஷர்கள்' என்ற மாயையை உடைத்தெறிந்து மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளாக திராவிட வம்சத்தினர் மிக நீண்ட நெடும் காலத்தின் முன்னிருந்து இங்கு பல்வேறு பகுதிகளிலும் பண்பட்ட நாகரீகச் செழுமையோடு வாழ்ந்து வருகிறார்கள் என்பதையே நிறுவ முயன்றன.

மட்டக்களப்பின் வரலாற்றைப் பேசும் ஆரம்ப நூல்களான மட்டக்களப்பின் பூர்வ சரித்திரம் மற்றும் அதன் திருந்திய மற்றொரு வடிவமாகக் கொள்ளக்கூடிய மட்டக்களப்பு மான்மியம் என்பன மட்டக்களப்பு வரலாறு குறித்து எழுதப்பட்ட வெறும் அனுமானங்களையும் கட்டுக் கதைகளையும் கொண்ட நூல் என்பதும் அது உண்மையான ஆதாரபூர்வமான வரலாறாக அமையவில்லை என்பதும் தொடர்ந்து சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றன விடயங்களே. சாதிய அரசியலும் குழும முன்னுரிமைப்படுத்தல்களும் தவிர்க்க முடியாதபடி இந்த நூல்களில் மேலோங்கி அமைந்திருப்பதும், முன்பின் முரணான கருத்துக்களை கொண்டிருப்பதுமான பல்வேறு பலவீனங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் முறைப்படியான தொல்லியல் சான்றாதாரங்களுடன் மட்டக்களப்பின் வரலாறு மீள எழுதப்பட வேண்டும் என்பதுவும் ஒரு பெரும் கோரிக்கையே. வரலாற்றாளர்கள் இந்தக் கோரிக்கைகளை சிரமேற்கொண்டு ஒழுக இதுவரை யாதொரு வழியும் கிடைக்கவில்லை என்பதுவும் உண்மை.

அதன்பின் வந்த வெல்லவூர்க் கோபாலின் 'மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்' , ' மட்டக்களப்புத் தேசம் வரலாறு வழக்காறும்' , தங்கேஸ்வரி எழுதிய மாகோன் வரலாறு, முக்குகர் வரலாறு, மட்டக்களப்பு வரலாற்றுப் பின்னணி, மட்டக்ககளப் பின் பூர்வீக வரலாறு முதலான நூல்கள் ஓரளவு தொல்லியல் ஆதாரங்களுடன் மட்டக்களப்பின் வரலாற்று அம்சங்களை பதிவு செய்ய முனைகின்றன என்ற கருத்தும் முக்கியமானது. ஆயினும் இவற்றிலும் மட்டக்களப்பு மான்மியம் முதலான நூல்களின் தாக்கமும் பாதிப்பும் மிகுந்து காணப்படுகின்றமையை பலரும் சுட்டிக்காட்டினர். முழுமையான தொல்லியல் ஆய்வுகள் இப்பகுதிகளில் செய்யப்படாத வரை மட்டக்களப்பின் முழுமைப்படுத்தப்பட்ட வரலாற்றை கண்டடைய முடியாது. அதற்காக மட்டக்களப்பு மான்மியம் முற்றுமுழுதாக ஒதுக்கி விடக் கூடியதல்ல. அதுவே, மட்டக்களப்பு வரலாற்றுக்கான தொடக்கப்புள்ளி.

மட்டக்களப்பின் பூர்வகுடிகளாக பல இன மரபுக் குழுக்களைக் குறிப்பிடலாம். இயக்கர்கள், நாகர், வேடர், புலியர், கழுவர், திமிலர் என இது வரிசைப் படுத்தப்படுகிறது. இவர்கள் யாவரும் திராவிட பண்பாட்டுக்கும் அடக்கப்பட கூடியவர்களா? என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. இயக்கர்களின் ஒருபகுதியினர் தானா இந்த வேடங்கள்? என்ற கேள்வியும் இங்கு வருகிறது. நாகர்கள்



(படம்: தம்பானை வேடர் சமூகம்)

பின்வந்த திராவிடக் குடிகளுடனும் சிங்கள மக்களுடனும் ஒன்று கலந்து விட்டனர். இதில் திமிலர், கழுவர், புலியர், மற்றைய சமூகத்துடன் ஒன்று கலந்து தமிழர் என்ற பொது அடையாளத்திற்கு உள்ளாகி விட்டனர். பூர்வீக் குடிகளாக வாழ்ந்த மக்களுடன் காலத்துக்கு காலம் ஏற்பட்ட இந்திய குடியேற்றங்களினாலும் வந்திணைந்த மக்கள் ஒன்று கலந்த கலப்பினூடாக இன்றைய சமூக அமைப்பு தோன்றியது என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. இதன் வழியே பூர்வக் குடிகள், குடியேற்றக்குடிகள் என்ற இரண்டு சமூக அமைப்புகளை வரலாற்றாசிரியர்கள் காட்ட முனைகின்றனர். ஆயினும் மட்டக்களப்பின் பூர்வகுடிகளை பொதுவாக இயக்கர், நாகர், வேடர்களைக் கொண்ட திராவிட பண்பாட்டுக்குரியவர்கள் என வகைப்படுத்துவதும் அதில் வேடர்களை இயக்கர்களுள் அடக்கமாக்கி விட்டு அதில் பண்பாட்டில் முன்னிலை கொண்டவர்களாக நாகர்களை காட்டுவதும் வரலாற்று நூலாதாரங்களில் இருந்து உணரக்கூடியதாயுள்ளது. நாகர் வழிவந்த மன்னர்களை வகைப்படுத்தியும், 'நாக' என்ற முன்னொட்டு கொண்ட இருக்கை பிரதேசங்களைக் காட்டியும் நாகர்களை முதன்மை குழுமமாகவும் அவர்களின் தொடர்ச்சியே இன்றைய மட்டக்களப்பு சமூகமாக கொள்வதும் காணப்படுகிறது.

இந்தத் தளத்தில் நின்று மட்டக்களப் பின் பூர்வக்குடிகள் பற்றியும் தங்களுக்குள் வகுத்துக் கொண்டுள்ள சாதி வழி முதன்மைப்படுத்தலையும் பேசுகின்ற நூல்களுக்கிடையில் ஒரு மாற்று சிந்தனையை கிளறிவிடும் வகையில் கலாநிதி செல்வராசகோபால் அவர்களின் 'யார் இந்த வேடன்'(1965) வெளிவந்தது. வேடர்களே மட்டக்களப்பின் பூர்வகுடிகள் என்பதை முன்னிறுத்தும் ஆதாரங்களை அது பேசியது. இதற்காக அதன் ஆசிரியர் நீதிவிசாரணை ஒன்றைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த சிந்தனையின் தொடர்ச்சியாக 1998 களில் வெளிவந்த கலாநிதி சி.மௌனகுரு அவர்களின் 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' எனும் நூல் களநிலை ஆய்வு முறைகளையும் மட்டக்களப் பின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பின் பூர்வகுடிகளாக வேடர் அமைவதை எடுத்துக்காட்டுகின்றது. மட்டக்களப்பின் ஆன்மீகப் பண்பாட்டின் முக்கிய கூறாக விளங்கும் குமார தெய்வ வழிபாட்டு முறையையும் அதில் மேற்கொள்ளப்படும் வேடுவர்களுக்குரிய வழிபாட்டு முறைகளும் இவரது முக்கிய சுட்டிக்காட்டுகளாக காணப்பட்டன. இன்றும் மட்டக்களப்பின் ஆங்காங்கே பரவிக் காணப்படும் வேடுவக் குடியிருப்புகளும் இங்குள்ள தேசத்து கோயில்கள் மற்றும் முக்கிய ஆலயங்களில் வேடுவர்களின் மரபுவழி வழிபாட்டு முறைகள் உள்ளடங்கி இருப்பதுவும் இதற்கு முக்கிய ஆதாரங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையை அடியொற்றி ஏ.விஜயரெட்ன (விஜய்) அவர்களின் 'மட்டக்களப்பு வரலாறு-பூர்விகக் குடிகளும் குமார தெய்வ வழிபாடும்' எனும் நூல் 2012 இல் வெளிவந்தது. மட்டக்களப்பின் பூர்வீக மக்கள் யார்? என்பதைக் கண்டறிவதில் மட்டக்களப்பில் விரவிக் காணப்படும் குமார தெய்வ வழிபாட்டு முறைகளையும் கொண்டு மட்டக்களப்பின் பூர்விகக் குடிகளாக வேடர்கள் அமைவதை இவர் எடுத்துக்காட்டுகின்றார். குமாரக் கடவுளாகவும் முருகனாகவும் இருந்த தமிழர்களின் வணக்கமுறை ஸ்கந்த, சுப்பிரமணிய வழிபாடாக மாற்றமுற்றமையை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

குமார தெய்வச் சடங்குகள் மற்றும் வேட வழிபாட்டு முறைகளையும் ஆலய வரலாற்றில் வேடர் வழிபட்ட இடமாக அவை காணப்படுவதையும் இன்னும் சில ஆதாரங்களையும் கொண்டு வேடர்களே மட்டக்களப்பின் பூர்வ குடிகள் என நிறுவ முயலும் போக்கை இங்கு காண்கிறோம். வேட குடியிருப்புகள் விந்தனை, தம்பானை கழுவன்கேணி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் இன்றுவரைக்காணப்படுவதும் வேடர்களின் ஆலயங்களும் வேடமொழியில் அமையும் சடங்குகள் என்பனவும் வேடர்கள் மட்டக்களப்பின் ஆதி சமூக அமைப்பில் முக்கிய அம்சம் என்பதை நமக்கு உறுதிபட காட்டுகின்றன. இவற்றையெல்லாம் நோக்கும்போது வேடர்கள் மட்டக்களப்பின் பூர்வகுடிகள் தான் என்பதில் உடன்படவே முடியும்.

தொடரும்.....

# கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியீடு!!

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நேற்று (01) அதிகாலை 4.00 மணி முதல் நீக்கப்படுவதைத்தொடர்ந்து, கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளுடன், இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள சில கட்டுப்பாடுகள், ஒக்டோபர் 15ஆம் திகதி வரை மிக இறுக்கமாக ஒழுங்கமைக்கப்பட் டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வழிகாட்டல்கள் வருமாறு:

- ★ வீடுகளிலிருந்து வெளியேறுதல் - தொழிலுக்காக, சுகாதார தேவை, அத்தியாவசிய கொள்வனவுக்கு மாத்திரம்
- ★ மதவழிபாட்டுத் தலங்கள் - ஒன்றுகூட அனுமதியில்லை.
- ★ வைபவங்கள்/ஒன்றுகூடல்கள்-அனுமதி இல்லை.
- ★ பிரத்தியேக வகுப்புகள் - அனுமதி இல்லை
- ★ உணவகங்கள் (சாப்பிடுதல்) ஒக்டோபர் 15 வரை அனுமதி இல்லை.
- ★ சிகை அலங்காரம் - ஒரே நேரத்தில் 2 வாடிக்கையாளர்கள்.
- ★ பகல் நேர சிறுவர் பராமரிப்பு - அனுமதி.
- ★ திருமண நிகழ்வு - ஒக்டோபர் 15 வரை 10 பேர்; ஒக்டோபர் 15 இற்கு பின் மண்டபத்தின் கொள்ளளவில் 25%, உச்சபட்சம் 50 பேர்
- ★ இறுதிச் சடங்கு: ஒக்டோபர் 15 வரை ஒரே நேரத்தில் 10 நபர்கள்; ஒக்டோபர் 15 இற்கு பின்: ஒரே நேரத்தில் 15 நபர்கள் (24 மணித்தியாலத்திற்குள் கிரியைகள்)
- ★ பல்பொருள் அங்காடிகள், மருந்தகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் - ஒக்டோபர் 15 வரை: ஒரே நேரத்தில் கொள்ளளவில் 10% அனுமதி; ஒக்டோபர் 15 இற்கு பின்: 20% அனுமதி
- ★ இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை அத்தியாவசியமற்ற பயணத்திற்கு அனுமதிக்கப்படாது
- ★ பஸ்கள்: ஆசன எண்ணிக்கையின் அடிப்படையில் பயணிகள் (அ/இ அனுமதிக்கப்படவில்லை)
- ★ விவசாய நடவடிக்கைகள் - அனுமதி
- ★ பாடசாலைகள் - 200 இற்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளை திறக்க சந்தர்ப்பம்
- ★ பாலர் பாடசாலைகள் - வருகை தரும் மாணவர்களில் 50% அனுமதி
- ★ பல்கலைக்கழகங்கள் - இறுக்கமான வழிகாட்டல்களுடன் ஆரம்பிக்க முடியும்
- ★ திரையரங்குகள் - அனுமதியில்லை
- ★ உடற்பயிற்சி நிலையங்கள் - ஒக்டோபர் 15 வரை: ஒரு தடவையில் 5 நபர்கள்; ஒக்டோபர் 15 இற்கு பின்: 30% அனுமதி

# பனங்காடு பிரதேச வைத்தியசாலை தொடர்பாக மக்களின் கோரிக்கை!

(கிரிசாந் மகாதேவன்)

அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் நீண்ட காலமாக கடமை ஆற்றி வந்த வைத்தியர் Dr. ஜாரியா அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்கின்றார்.

இதுவரை காலமும் சிறந்த சேவையாற்றி வந்த வைத்தியர் Dr. ஜாரியாவுக்கு ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் மற்றும் பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினர் நன்றிகளைத் தெரிவித்தனர்.

இடமாற்றம் பெற்றுச்செல்லும் வைத்தியரின் வெற்றிடத்திற்கு பிறிதொரு வைத்தியர்கடமையைபொறுப்பேற்கஉள்ளநிலையில், கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையினால் நிர்வகிக்கபடுகின்ற வைத்தியசாலைகளில் 24 மணி நேரமும் அவசர சிகிச்சைப் பிரிவு (ETU) இயங்கி வருகின்றது.

ஆனால் பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் இரவு வேளைகளில் வைத்தியர் வைத்தியசாலை வளாகத்தில் கடமையில் இல்லாத நிலை காணப்படுகின்றது. வைத்தியர் இரவு வேளைகளில் வைத்தியசாலை வளாகத்தில் கடமையில் இல்லாமை மிக நீண்ட காலமாக (எட்டு வருடங்கள்) காணப்படுகின்ற நிலை மனவேதனைக்கு உரிய விடயம் ஆகும்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் காணப்படுகின்ற மிகவும் பின் தங்கிய கஸ்ரப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஏழை மக்களின் பிரதான உயிர் நாடியாக காணப்படுகின்ற இவ் குறித்த வைத்தியசாலையில் இரவு வேளைகளில் கண்டிப்பாக ஓர் வைத்தியர் தங்கி இருந்து அவசர நிலைகளில் சிகிச்சை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவை ஆக உள்ளது என பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர் இயன் மருத்துவர் கே.ஹரன்ராஜ் தங்கள் நிலைப்பாட்டினை தெரிவித்து இருந்தார்.

மேலும் 08 வருடங்களுக்கு முன்னர் கடமையாற்றி வந்த வைத்தியர்கள் திரு. திருமதி Dr. அகிலன் இருந்த காலத்தில் இரவு வேளைகளில் வைத்தியசாலை சிறப்பாக இயங்கி 10 குழந்தைகள் வரை சுக பிரசவம் நடந்தேறியது.

அத்துடன் ஒரு நாள் இரவு அவசர நிலைமைகளில் வந்த ஒரு நோயாளியை அம்புலன்ஸ் சாரதி இல்லாத காரணத்தினால் அகிலன் வண்டியை ஓட்டி சென்று அருகில் உள்ள ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து சென்று உயிர் காப்பாற்றிய சம்பவம் ஒன்றையும் இங்கே சுட்டி காட்ட விரும்புகின்றேன் எனவும் குறிப்பிட்டு இருந்தார்.

ஆலையடிவேம்பு பின்தங்கிய கஸ்ரப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஏழை மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு, பொறுப்புவாய்ந்த உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மிக விரைவில் மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் மற்றும் வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பிஞ்சு உள்ளங்களை கருக்கி விடாதீர்கள்

- ❋ பிறப்பின்போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
- ❋ பெற்றோரைத் தெரிந்துகொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை.
- ❋ பெற்றோரிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை.
- ❋ கருத்தை வெளிப்படுத்தும் உரிமை.
- ❋ சிந்திப்பதற்கும் மனச்சாட்சிப்படி நடப்பதற்கும் சமயமொன்றை பின்பற்றுவதற்குமான உரிமை.
- ❋ சமூக உரிமை, தனியுரிமை, சுகாதார வசதிகள் பெறும் உரிமை.
- ❋ போதிய கல்வியைப்பெறும் உரிமை.
- ❋ பொருளாதார சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை.
- ❋ பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாக்கும் உரிமை.
- ❋ சித்திரவதை/ குரூரமாக நடத்துதல் போன்ற தண்டனைகளிலிருந்து தவிர்த்துக்கொள்ளும் உரிமை.
- ❋ சாதாரண வழக்கு விசாரணைக்குள்ள உரிமை.
- ❋ சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை.

இவ்வாறு பல்வேறு உரிமைகள் சிறுவர் உரிமை தொடர்பில் பட்டியலிடப்பட்டுள்ளன.

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க அவர்களை நல்வழிப்படுத்த உள்நாட்டு, சர்வதேச ரீதியாக பல நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்று சிறுவர்கள் தொடர்பான சட்ட ஒழுங்குகளை ஒவ்வொரு நாடும் கொண்டிருப்பது போன்று சர்வதேச ரீதியாக பல நிறுவனங்கள் சிறுவர்களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்களும் அமைச்சு மட்டத்தில் திணைக்களங்களும் செயலாற்றி வருகின்றன. இதில் குறிப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பங்கு மகத்தானது.

இவ்வாறான சூழ்நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் உலகமெங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒரு துரதிஷ்டமான நிலைமையேயாகும். இதனை இல்லாமல் ஒழிக்க பல நாடுகள் பல சட்டங்களை கொண்டு வந்தாலும் இது ஓய்ந்தபாடில்லை. பல காரியங்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுவதால் பிற்காலத்தில் அவர்கள் ஒரு வன்முறையாளர்களாக வருவதற்கான சாத்தியமே உண்டு.

சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவதற்கு எவ்வளவுதான் முயற்சிகள்எடுத்தபோதும்அவைஅனைத்தையும் மீறிய செயற்பாடாகத்தான் தற்போது நிகழ்கின்ற வன்முறைகளும் அட்டூழியங்களும் காணப்படுகின்றன. அண்மைக் காலமாக இலங்கையிலும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது நாம் அனைவரும் வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறான பல வன்முறைகள் இன்று உலக அரங்கில் சிறுவர்களுக்கெதிராக நடைபெற்று வருவதை எம்மால் அவதானிக்க முடியும். எமது நாட்டிலும் கூட அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற சிறுபிள்ளைகளின் கடத்தல்கள் பாலியல் வல்லுறவு மற்றும் கொலைகள் பலவிதமான கேள்விகளை எழுப்பியுள்ள அதேவேளை, பெற்றோர்கள் மத்தியிலே ஓர் அச்ச உணர்வை உண்டாக்கியிருக்கிறது.

குடும்பங்களுக்கிடையிலே நிலவுகின்ற தனிப்பட்ட கோபங்களுக்காகவும் / குரோதங்களுக்காகவும் சிறுபிள்ளைகள் பலிக்கடாவாக்கப்படுவதை அண்மைய சில துர்ப்பாக்கியகரமான நிகழ்வுகளின் பின்னணி உறுதிப்படுத்தியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே நாளைய தலைவர்களாக வரவேண்டிய இன்றைய இளம் சிறார்களை அவர்களைச் சுற்றியுள்ள பொறுப்புதாரர்கள் அனைவரும் தத்தமக்குரிய வகிபாகத்தை சரிவர நிறைவேற்றி ஊக்குவிப்பார்களாயின் நிச்சயமாக எதிர்காலத்தில் சிறந்ததொரு சந்ததியை எதிர்பார்க்கலாம்!

**“மகத்துவம் மிக்கதோர் சிறுவர்கள் சமுதாயத்தினை உருவாக்குவோம்.”**

# முன்னாள் போராளிக்கு புலம்பெயர் அமைப்பினால் வாழ்வாதார உதவி

(செல்வி வினாயகமூர்த்தி.)

பல்வேறுபட்ட சமூக நலன் சார்ந்த வாழ்வாதார உதவிகளை தாயகம் முழுதும் வழங்கிவரும் புலம்பெயர் அமைப்பினால் முன்னாள் போராளி ஒருவருக்கு அவரது வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்ணகி கிராமத்தைச் சேர்ந்த 1999ஆம் ஆண்டு விடுதலைப்போராட்டத்தில் இணைந்து போராட்ட களத்தில் தனது வலது காலிலும் மார்பிலும் காயங்களுக்குட்பட்டு கூலித் தொழிலின் மூலம் ஜீவனோபாயம் நடத்திவரும் முன்னாள் போராளி ஒருவருக்கு அவரது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புலம்பெயர் சமூகநல அமைப்பான ‘மனிதநேயம்‘ அமைப்பினரால் முதற்கட்டமாக சிறுகடை அமைப்பதற்கான உதவி வழங்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக அதன் 2ஆம் கட்டமாக சிறுகடை தொழிலை மேம்படுத்தும் நோக்கில் இரு குளிர்சாதனப்பெட்டிகளும் வழங்கிவைக்கப்பட்டது.

காய்கறிகளை பழுதுபடாமல் களஞ்சியப்படுத்தி பாதுகாக்கும் குளிரூட்டியொன்றும் (vegetable cooler) மென்பானங்களை களஞ்சியப்படுத்தி பாதுகாக்கும் குளிரூட்டியும் (bottle cooler) வழங்கி வைக்கப்பட்டது.

இறுதி யுத்தத்தின் பின்னராக வலது காலிலும் மார்பிலும் காயப்பட்டு தமது இயலாத காலோடு மற்றயவரின் உதவியின்றி குறித்த போராளி கடந்த 10 வருடங்களாக கூலித் தொழிலின் மூலம் தமது வாழ்வை பல இக்கட்டான சூழ்நிலையிலும் கடத்தி வந்துள்ளார்.இந்நிலையில் அமெரிக்கா வாழ் ‘மனிதநேய‘ அமைப்பினரால் இப்போராளிக்கு நிரந்தர வாழ்வாதாரத்தினை ஏற்படுத்தும் நோக்கில் சிறுகடை அமைத்துக் கொடுத்துள்ளதுடன் இவ் குளிரூட்டிகளையும் மேலதிகமாக வழங்கி வைத்துள்ளது.

இதன்போது ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் தட்சணாமூர்த்தி நவநீத ராஜா போராளிக்கான குளிரூட்டி சாதனங்களை நேரில் சென்று வழங்கி வைத்தார்.

## கல்முனைகுடியில் நான்கு கால்களுடன் கோழிக்குஞ்சி!

மாளிகைக்காடு நிருபர்



அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி பிரதேசத்தின் கடற்கரைப்பள்ளி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நான்கு கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. வீட்டு உரிமையாளரால் நாட்டுக்கோழி வளர்ப்பதற்காக அடைகாக்க வைக்கப்பட்ட முட்டைகளிலிருந்து நான்கு கால்களை உடைய 2 நாட்களேயான இக்கோழிக்குஞ்சு பார்ப்பதற்கு அரிதாக பிறந்துள்ளது.

## மேதகு திரைப்படத்துக்கு கம்போடியாவில் தடை

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கின்ற மேதகு திரைப்படத்தை ஒளிபரப்பு செய்வதற்கு கம்போடிய அரசாங்கம் தடை பிறப்பித்து உள்ளது.

மேதகு திரைக்களம் தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்பில் கிட்டுவின் இயக்கத்தில் கடந்த ஜூன் மாத இறுதியில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழருக்குநடந்தஅடக்குமுறைகள்மற்றும் துரோகங்கள், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடுமைகள் ஆகியன உள்ளபடி இதில் காட்டப்பட்டு உள்ளன என்று பட குழுவினர் தெரிவித்து உள்ளனர்.

இப்படத்தை ஒளிபரப்ப அனுமதிக்காமல் தடை விதிக்குமாறு கம்போடியாவை இலங்கை கோரியது. கம்போடியாவின் வெளியுறவுகள் மற்றும் சர்வதேச தொடர்பாடல்கள் அமைச்சுக்கு இவ்வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டது.

# முகில்வண்ணன்

வாரம் ஒரு படைப்பாளி

வேலுப்பிள்ளை சண்முகநாதன் என்ற இயற்பெயரைக் கொண்ட முகில்வண்ணன் அம்பாறை மாவட்டம் கல்முனை பாண்டிருப்பில்17.12. 1942 ல் பிறந்து,வாழ்ந்தவர் கல்முனையிலேயே கல்விகற்று அங்கே கட்டிடத்திணைக்களத்தில் தொழில்நுட்பவியலாளராக பணிபுரிந்தவர். நான் எண்பதுகளின் ஆரம்பத்தில் சில வருடங்கள் பாண்டிருப்பில் இருந்தபோது இவருடன் பழகவும் கருத்துப் பரிமாறவும் முடிந்தது. இனிமையானவர். இங்கிதமாக பேசுவார். அவருடன் பேசும்போது பல சுவையான சம்பவங்கள் சொல்வார். மகிழ்ச்சித்தருணங்கள் அவை.இவர் தனது 17 வது வயதிலேயே எழுதத் தொடங்கியவர். 17 வயதில் இவர் பாடசாலையில்படித்துக்கொண்டு இருக்கும்போது இவரது தமிழாசிரியர் நடராஜா அவர்களின் தூண்டுதலினால்பாடசாலை வெளியிட்ட பத்திரிகையில் இவர் தனது முதலாவது சிறுகதையை எழுதியுள்ளார். இவருக்கு சின்ன வயதிலிருந்தே இந்திய சஞ்சிகைகள் வாசிக்கும் பழக்கம் இருந்துள்ளது.இலங்கை எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை (எஸ்பொ) அவர்களின் நூல்களை படித்த இவர் அவர் போல் தானும் எழுதவேண்டும், எழுத்தாளன் ஆகவேண்டும் என்று எண்ணினார் என்று இவர் ஒரு நேர்காணலில் சொல்லியுள்ளார். இவர் 1961 லிருந்து எழுதத் தொடங்கினார். இவரது படைப்புகள் இலங்கை தேசிய பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின.இவர் சிறுகதைகள்,நாவல்,கட்டுரை,கவிதை,சிறுவர் இலக்கியம்,மொழிபெயர்ப்புகள் என்று பல களங்களில் நின்று எழுதியுள்ளார். இவர் எழுதிய ' இனியும் நான் இராமன்தான் ' என்ற நூல்கல்முனை தமிழ் சங்கத்தால் 2011 ம் ஆண்டு சித்திரைமாதம் நான்காம் திகதி வெளியிடப்பட்டது.இவரது ' செல்லக்கிளி ' நாவலை 11.09.2011 அன்று மட்டக்களப்பு செங்கதிர் இலக்கிய வட்டமும், மட்:பொதுநூலக வாசகர் வட்டமும் இணைந்து வெளியிட்டன, இவர் பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் மூன்று கவிதை நூல்கள்,இரண்டு நாவல்கள், இரண்டு சிறுகதை நூல்கள்,இரண்டு சிறுவர்களுக்கான நூல்கள்,ஒரு கட்டுரை நூல் என்று அறிய முடிகின்றது. இவற்றுள் மூன்று நூல்கள் சிறந்த நூல்களுக்கான பரிசையும், விருதினையும் பெற்றிருக்கின்றன. 2013 ம் ஆண்டு தைமாதம் வெளிவந்த செங்கதிர் கலை,இலக்கிய பல்சுவை இதழின்அட்டைப்படம் இவரின் படத்தை தாங்கி வந்து அவருக்கு பெருமை சேர்த்தது. மட்டக்களப்பு பிரதேசத்தில்குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எழுத்தாளர்களின் பட்டியலில் முகில்வண்ணனும் இடம்பெறுகின்றார்.இவர் 17.09.2020 ல் இந்த பூவுலக வாழ்வை முடித்துக்கொண்டு மறைந்தார். அவர் ஈட்டிய பெயரும்,புகழும்என்றும் எம்முடன் வாழும்.



**கோவிலூர் செல்வராஜன்**

# தென்பாண்டித் தமிழே!

**தென்பாண்டித் தமிழே தேயாத**
**நிலவே!**
**மழலையின் மொழியில் தித்திக்கும்**
**தேனே!**
**திகட்டாத அமிர்தமே தீராத பந்தமே!**
**காலங்கள் மாறினும் மாறாத**
**வம்சம்!**
**பழமைக்கு முந்திய பைந்தமிழ் நீயே!**
**காதலாய் உன்னையே தினமும்**
**தேடுகிறேன்!**
**முழுமதி நீயாகி முழுமை காண்**
**கிறேன்!**
**கவிதையில் கலந்துட்டு காவியம்**
**படைக்கிறேன்!**
**வார்த்தைகளைக் கோர்த்தே**
**வடிவத்தைத் தருகிறாய்!**
**முத்தான சொற்களை அள்ளி**
**தெளிக்கிறாய்!**
**வரலாறு போற்றிடும் வற்றாத**
**நதியே!**
**தமிழரின் சொத்தே புகழின்**
**உச்சமே!**

**–சுலக்சனா சுபாசங்கர்–**

கலம்பகம்

**க.மங்களேஜ்வரி**

# இலக்கியம் என்பது..?



இலக்கியம்” என்றால் என்ன என்பது பற்றி அன்று முதல் இன்றுவரை ஒவ்வொரு அறிஞரும் தம் அறிவுக்குட்பட்ட வகையில் பல்வேறு விதமான கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளனர். “இலக்கியம்” பற்றிய இவ்வறிஞர்களது கருத்துக்கள் ‘இலக்கியம்’ என்ற பொருள் நிலையை எந்தளவுக்கு பூரணமாய் புலப்படுத்துகின்றன என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. பொதுவாக நோக்குமிடத்து. யாரிடமாவது இலக்கியம் என்றால் என்ன என்று கேட்கும்போது அவர்கள் தமக்குத் தெரிந்த இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் நளவெண்பா போன்றவற்றையுமே இலக்கியம் எனக் கூறுவர். ஆனால், இவை யாவும் இலக்கிய நூல்களுள் சிலவே என்பது அவர்களுக்குத் தெரியாது.

மேலும், சிலரோ மேற்குறித்த இலக்கிய நூல்களை அடிப்படையாக வைத்து இலக்கியம் என்பது ஒருவரது வரலாற்றை செய்யுள் வடிவில் கூறுவது என நினைக்கின்றனர். இராமனது வரலாற்றைக் கூறுவதால் இராமாயணம் ஓர் இலக்கியம் எனவும் பஞ்சபாண்டவர்களினதும் கௌரவர்களினதும் கதையைக் கூறுவதால் அதுவும் ஓர் இலக்கியம் எனவும், இவ்வாறு எவையெவையெல்லாம் வரலாறு கூறி நிற்கின்றனவோ அவற்றையெல்லாம் இலக்கியமாகவே கருதுகின்றனர். உண்மை யாதெனில், இவையாவும் இலக்கிய நூல்களுள் சிலவேயன்றி இவையாவும், ‘இலக்கியம்’ என்ற பொருள் நிலையைப் பூரணமாகப் புலப்படுத்துவனவல்ல. மேற்குறித்தவற்றை இலக்கியம் எனக் குறிப்பிட்டால் சங்க கால எட்டுத் தொகைகளையும் பத்துப் பாட்டையும், வள்ளுவரின் திருக்குறளையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும், ஔவையாரின் நீதி நூல்களையும் இலக்கியமாகக் கருத முடியாது. ஏனெனில் இவை யாவும் குறித்த ஒருவரின் வரலாற்றைக் கூறுவனவல்ல. இந்நிலையில் ‘இலக்கியம்’ என்றால் என்ன என்பது பற்றி ஆராய்வது இன்றியமையாத ஒன்றாகும்.

**தொடரும்....**

# இந்திய வானொலியில் இலங்கைத் தமிழ் பாடல்கள்

கடந்த 26,09.2021 அன்று தமிழ் நாடு, சென்னையிலிருந்து ஒலிபரப்பாகும் இணையத்தள வானொலியான **Verticalradio. in** என்ற வானொலியில் இலங்கைத் தமிழ் பாடல்கள் என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது. நிகழ்ச்சியை முழுவதுமாக கேட்டேன் அம்பிகா சண்முகம் அவர்களின் தொகுப்பில் நிகழ்ச்சி அழகுபெற்றது. இந்த நிகழ்ச்சியில் எமது மண்ணின் மைந்தனும்,பல்துறைக் கலைஞனும்,முன்னாள் இலங்கை வானொலி பணியாளருமான கோவிலூர் செல்வராஜன் அவர்களின் பாடல்கள் ஒலிபரப்பாகின. அவர் இயற்றிய பாடல்களும், அவர் பாடியபாடல்களும், இசையமைத்த பாடல்களும் இடம்பெற்றன. ஆரம்பத்தில் கவிஞர் கோவிலூர் பற்றிய அறிமுகமும்,ஒவ்வொரு பாடல்களுக்கும் இடையில் அவர் பெற்றவிருதுகள்,பரிசுகள் பற்றிய விபரங்கள் பாராட்டுக்கள் என்று தொகுப்பு மிளிர்ந்தது. நிகழ்ச்சிக்குள் கவிஞர் அறிமுகத்தை சிறப்பாக செய்தார் தொகுப்பாளினி அம்பிகா அவர்கள். ஒருமணி முப்பது நிமிடம் இலங்கைப்பாடல்களை கேட்க கிடைத்தது புதிய அனுபவம். இலக்கைபபாடல்களுக்கு சர்வதேச அங்கீகாரம் வழங்கிய நிகழ்ச்சி அது. கோவிலூர் செல்வராஜன் பல்துறைக் கலைஞன். அவர் எழுதிய பாடல்கள் அவரின் குரலிலும்,இன்னும் சிலரின் குரலிலும் ஒலித்தன. பாபா பற்றிய பக்திப்பாடலோடு தொடங்கிய நிகழ்ச்சி,பல்வேறு இடங்களை நோக்கி எம்மை இழுத்துச் சென்றது. ஆழமான கருத்துள்ள பாடல்கள்.வெளிநாட்டு வாழ்க்கை,இலங்கையில் வாழ்வைத் தொலைத்தமை,வயல் நிலப் பாடல், இழந்துபோன கடற்றொழில்,களப்பு மீன் பிடித் தொழில்,என்று பாடல்கள் அமைந்திருந்தன.பாடிய குரல்களும் மிக அருமை. நிகழ்ச்சி தொகுப்பாளருக்கு பாராட்டுக்களும்,மனமுவந்த நன்றிகளும். கலைஞர் கோவிலூர் செல்வராஜன் அவர்களுக்கும்,பாடகர்,பாடகிகளுக்கும்வாழ்த்து மாலைகள். பாடல்களுக்கு இசையமைத்த எம். பி கோணேஷ் ,ஜோசுவாராஜன், செல்வா கணேஷ்ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள். இப்படிப்பட்ட முழுக்க முழுக்க இலங்கை பாடல்களை எடுத்து பிரதி ஞாயிறு தோறும் ஒலிபரப்பு செய்யும் **Verticalradio. in** வானொலி நிறுவனத்தார் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள். இந்த வானொலிக்காக நெதர்லாந்து நாட்டிலிருந்துதொகுத்து வழங்கும் அம்பிகா சண்முகம் அவர்களை நாம் வெகுவாக பாராட்டுகின்றோம்.இது போன்ற நல்ல நிகழ்ச்சிகள் தொடரவேண்டும்.




**–பாவேந்தல் பாலமுனை பாறூக் –**



# பெண்மை போற்றும் பாரதி

பாட்டுக்கொரு புலவன்
பாரதியை பாரினில் போற்றாத
மாமனிதர்கள் மண்ணில் உண்டா?
மங்கையர் மனங்களில்
மகுடம் உமக்கு
“அச்சமடநாணமத்தனையும் வேண்டும்
நாய்கட்கு”என்று பொங்கியே

எத்தனை கவிகள் சொன்னாய்
அத்தனையும் காலம் கடந்தும் வாழ்ந்~
புத்துயிர் ஊட்டியே
புதுமைப்பெண்களை
புறப்பட வைத்தாய்!

துணிவு என்பதற்கு
துணை உமது நாமமே!
எளிமைக்கு எடுத்துக்க~
ாட்டும் நீரே!
எத்தனை கவிகள்
சொன்னாய்

துகொண்டிருக்கின்றன
மண்ணை விட்டு மறைந்தாலும்
மறந்திடாமல் கொண்டாடுகிறோம் உமது
பிறந்தநாளை

சாதிகள் இல்லையென்றாய்
சாக்கடைகளை எல்லாம் துடைத்தெ
றிந்தாய்
வீழ்வேன் என்று நினைத்தாயோ என்று
எழுந்துவீர வாக்கியம் பேசிட
வித்திட்டவரும் நீர் தான்

தமிழ் அன்னை பெற்றெடுத்த
தவப்புதல்வன் நீரே
தமிழ் தூங்கிட கூடாதென்று
தரணி முழுவதும் தொட்டு சென்ற நீரோ
தாலாட்டு மட்டும் பாடவில்லையாமே!

பயந்தவன் கூட
பவ்வியமாக எழுவான்
பாடி வைத்த “அச்சமில்லை அச்ச
மில்லை”
பாடல் கேட்டிடவே!
பாமரன் கூட வாழ்கின்றான் உம்மால்

“பெண்ணடிமை தீருமட்டும்
பேசும் இத்திருநாட்டில்
மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே”
என்று
பெண்ணுரிமை சாசனம்
வரைய முன்பே
பெண்ணின் பெருமையை
பறைசாற்றினாய் பாரினில் பக்குவமாகவே

போற்றி போற்றியாயிரம் போற்றி
நின்பொன்னடிக்கு
பல்லாயிரம் போற்றிகான்” என்று
ஆண்மகனாக இருந்தே
பெண்மையை போற்றிய
பெரும் புதல்வன் நீர் ஐயா!

“ஆணும் பெண்ணும் சரிநிகர்
எனக்கொள்வதால் வையகம் தளைத்~
திடும்” என்று
பால்நிலை சமத்துவ பாதையில் பயணிக்க
பாதை காட்டிய பண்பாளன் நீரே

தலை வணங்குகிறோம்
தழிழ் வளர்த்த
தலைவனுக்கு
தமிழ் தந்தைக்கு

## விடுகதைகள்

1. உயிர் இல்லாத நடுவரிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன?

விடை: தராசு

2. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?

விடை: வாழைப்பூ

3. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?

விடை: விரல்கள்

4. இரவல் கிடைக்காதது

இரவில் கிடைப்பது அது என்ன?

விடை: தூக்கம்

5. கதிர் அடிக்காத களம் உயிர் பறி~க்கும் களம் அது என்ன?

விடை: போர்க்களம்

6. பூவுக்குள் பூ வைத்து போர்த்திய பூ அது என்ன?

விடை: வாழைப்பூ

7. இதயம் போல் துடித்திருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?

விடை: கடிகாரம்

8. உருவம் இல்லாதவன் சொ~ன்னதைத் திரும்பச் சொல்லுவான் அவன் யார்?

விடை: எதிரொலி

## பெண்களுக்கெரான வன்முறைகள் தொடர்பில் கூடுதல் கரிசனை



**எஸ்.ஜெகராஜன்**
**காரைதீவு பிரதச செயலாளர்**

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது உலகளாவிய ரீதியில் பிரதான~மான பிரச்சினையாக இருக்கிற போதிலும் வளர்முக நாடுகளில் இதன் தாக்கம் அதி~கமானதாக இருக்கிறது. 1990 களுக்கு பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் அதிகளவான கவனம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுக~ளில் மேலோங்கி உள்ளது. உலகளாவிய ரீதியில் மூன்றில் ஒரு பங்கான பெண்கள் குடும்ப வன்முறைகளுக்கு ஆளாவ~தாக கூறப்படுகின்றது. குடும்ப வன்முறைகள் எனும் போது குடும்ப வன்முறையினால் பாதிக்கப்படுபவர்கள், குடும்ப வன்முறையை ஆதரிப்பவர்கள் அல்லது தூண்டுபவர்கள் எனும் 3 பகுதியினை குறித்து கவனம் அவசியமானதாகும்.

பெரும்பாலும் இத்தகைய மூன்று பகுதியினரும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விளக்கங்கள் அற்றவர்களா~கவும் அது எவ்வாறு சட்டத்தினால் தண்டனை விதிக்க கூடியதாக இருக்கி~ன்றது என்பது குறித்தும் போதிய விளக்கம் அற்றவர்களாக இருப்பது அனுபவத்தில் அறியப்படும் விடயமாக இருக்கின்றது. சிலர் கலாச்சார ரீதியாக எமக்கு அத்தகைய உரிமை உள்ளது என விவாதிப்ப~தும் அது எத்தகைய பாரதூரமான விடயம் என்பதை அறியாதவர்களாக இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே பெண்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அதேவேளை பெண்களை, பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்பவர்கள் சட்டத்தின~ால் தண்டிக்கப்படுவதனூடாக தவறுகள் குறைக்கப்படும் என்ற வகையில் பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

மங்கையர் மகுடம்
ஜெனிதா மோகன்






D.லதுர்ஷா
தரம் –1M
கமு/கார்மேல் பாத்திமா கல்லூரி,
தேசிய பாடசாலை.

# பன்முக திறமைகளை தன்கத்தே வைத்துள்ள

# கல்முனை செல்வவேல்



**சர்வதேச முதியோர் தினத்தையொட்டி கல்முனையில் உள்ள பன்முகக் கலைஞன் – படைப்பாளி கல்முனை செல்வவேல் தொடர்பான பார்வை**

. பொதுச்சேவையில் இன்றும் தன்னை ஈடுபடுத்தி செயற்படுகின்ற வயதில் முதியவராக இருந்தாலும் மனம் இன்றும் இளமையுடன் உள்ளதால் தனது கலைத்திறமையையும் இன்றும் வெளிப்படுத்தி வரும் 74 வயதுடைய வேலுப்பிள்ளை வெல்வவேல் . பாடல்களை எழுதி பாடும் ஆற்றல் உள்ளவர் பல மேடைகளில் நாடகங்களில் நடித்து அனைவராலும் அறியப்பெற்றவர். இன்றும் பல முதியோர் சங்க நிகழ்வுகளில் நிகழ்வுகளை தொகுத்து வழங்கம் அறிவிப்பு திறனும் உள்ளவர். அண்மையில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். கல்முனை சிரேஷ்ட்ட பிரஜைகள் அமைப்பின் செயலாளராக இருந்து முன்மாதிரியாக செயற்பட்டுவருபவர்.

கல்முனையில் தம்பியப்பா வேலுப்பிள்ளை அவர்கட்கும் அலையப்போடி செல்வனாச்சி அம்மையாருக்கும் 1944ம் வருடம் மூத்த புதல்வனாகப் பிறந்துள்ளார். இவர் தனது ஆரம்ப கல்வியை கமு: இராமக்கிருஸ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் பயின்றுள்ளார். இவரது அப்பப்பா அந்நாளில் கூத்துக் கலைஞராக மேடை ஏறியுள்ளார். இவரது தந்தை ஹார்மோனியம் இசைத்து பாட்டுப் பாடும் திறமையுள்ளவர். தந்தையைப்போன்றே கலைத்துறையில் தன்னை ஈடுபடுத்தும் செல்வவேல் சிறு வயதிலே இருந்து பாடசாலையில் நாடகங்களில் நடித்துப்பாடி ஆடி தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். இவரது தாயாரும் பாடசாலையில் நாடகங்களில் நடித்துள்ளார். 1961 ஆம் ஆண்டு காலத்தில் கலைத்துறையில் தன்னை முழுமூச்சாக ஈடுபடுத்தியதுடன் பாரதி கலை மன்றத்தையும் ஸ்தாபித்தார். இதிலே இவர் தலைவர், செயலாளராக பதவி வகித்துள்ளார். காலப் போக்கில் இவர் காசிய நாடகங்களிலும், சமூக நாடகங்களிலும், பக்தி நாடகங்களிலும் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். செல்வவேல் நடித்துள்ள முதலாவது நாடகமாக இலட்சியப் பெண் இடம்பெற்றது. இதிலே இவர் மாறுபட்ட வேடமாக கதாநாயகி வேடமேற்றுச் சிறப்பாக மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். அடுத்து தியாக உள்ளம், யார் அந்தக் கொலைகாரன், துளி விக்ஷம், இரத்தக் கண்ணீர், சங்கிலியன், பண்டார வன்னியன் போன்ற நாடகங்களில் பிரதான கதா பாத்திரமாக நடித்துள்ளார். இவர் கல்முனை, கொழும்பு, பாண்டிருப்பு, மட்டுநகர், நாவிதன்வெளி, எருவில், சவளக்கடை, அம்பாரை ஆகிய இடங்களிலும் கலை நிகழ்வுகளில் நடித்துள்ளார். சிங்கள மக்களின் சிங்களப் பாடலையும் பாடி பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். 2006ம் வருடம் கல்முனையில் சிரேஷ்ட்ட பிரஜைகள் குழுவை ஆரம்பித்து 1,2,3 பிரிவுகளில் முதியோரை இணைத்து செயலாளராக கடமையாற்றி வருகிறார். 2015 ஆம் வருடம் சமூகத்திற்காக சேவையாற்றியதற்கும் 2016 ஆம் வருடம் சிவில் பாதுகாப்பில் ஈடுபட்டதிற்கும் பாராட்டுப் பத்திரம் பெற்றுள்ளார். இவர் சிரேஷ்ட்ட பிரஜைகள் குழு செயலாளராகவும், கல்முனை OLC குழு செயலாளராகவும் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும், பாரதி மன்றத் தலைவராகவும், மகா விஷ்ணு ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும், கலைஞராகவும் ஆன்மிக வாதியாகவும் வாழ்ந்துள்ளார். கலை, கலாசாரத்துக்காக பங்களிப்பு செய்ததற்காக இவருக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டுக்காக கலைஞர் சுவதம் விருது வழங்கப்பட்டது. இந் நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது முன் நிலையிலும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இவர் தனது அப்பப்பா தம்பியப்பா (கங்காணியார்) தாய் செல்வனாச்சி தந்தை வேலுப்பிள்ளை ஆகியோர் வழியில் கலைத்துறையில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். சர்வதேச முதியோர் சிறுவர் தினத்தையொட்டி பல்வேறு திறமைகளை தன்னகத்தே வைத்துள்ள செல்வவேல் எனும் முதியவரை எமது ஊடகமும் வாழ்த்தி இந்த பதிவை செய்கின்றோம்.

**–பு.கேதீஸ்–**







# தமிழர் வழிபாடுகளும் சடங்குகளும்

**ஐந்து** கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே...
என்று விநாயகபெருமானை வணங்கியவனாக.

தற்காலத்தில் மிகவும் மருவி வரும் எமது தமிழர் வழிபாடுகளும் சடங்குகளும் என்ற தலைப்பில் சில ஆய்வுக்கட்டுரைகளை எழுத உள்ளேன்.அந்த வகையில்,தமிழரின் ஆரம்பகால வழிபாடான நடுகல் வழிபாடு, அது போன்று சடங்கு வழிபாடுகள், தற்காலங்களில் மறைக்கப்பட்டதாகவும் அழிக்கப்பட்டு கொண்டு இருப்பதும் வேதனை அளிப்பதாக உள்ளது.

எமது தமிழர் வழிபாடானது தூய்மையான செந்தமிழ் முறைப்படியே ஈழத்தில் அமைந்து இருந்தது.இந்த வழிபாடானது ஆகமம் சாராத வழிபாடாகவே இருந்தது. ஆரம்ப காலத்தில் இந்த ஆகமம் சாரத வழிபாட்டு முறையினை பத்ததி வழிபாடு என்றும் அழைப்பர்.இப்பத்ததிகள் என்பது எழுத்தானி கொண்டு ஓலைச்சுவடிகளில் எழுதபட்டவையாக இருக்கும்.
இப்பத்ததிகளில் பூசைவிதிமுறைகளையும் மந்திரஇயந்திரங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.இப்பத்ததி வழிபாட்டு முறையில் விக்கிரக வழிபாட்டு முறையை விட கும்பம் வைத்தல் மடைபிரிவுகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

தற்காலத்தில் காணப்படும் பத்ததி வழிபாட்டு முறைகளில்
மாரியம்மன் பத்ததி
காளியம்மன் பத்ததி
பேச்சியம்மன் பத்ததி
திரௌபதையம்மன் பத்ததி
கண்ணகையம்மன் பத்ததி
வைரவர்பத்ததி
பெரியதம்பிரான் பத்ததி
வதணமார் பத்ததி போன்றவை காணப்படுகிறது.

இந்த பத்ததி முறைகளில் வழிபாடுகள் செய்யப்படும் போது,பக்தருக்கும் தெய்வத்திற்கும் இடையிலான தொடர்புகளும் அந்நியயொந்நியமும் அதிகமாக காணப்படும்.

இந்த ஒவ்வொரு தெய்வங்களுக்குரிய பத்ததிகளிலும் பல பத்ததிகள் காணப்படுவது இதன் சிறப்பம்சமாக காணப்படுகிறது.இனி வரும் அடுத்தபதிவுகளில் ஒவ்வொரு தெய்வத்திற்குரிய பத்ததிகள் பற்றி ஆராய்வோம்.



எழுத்துவழவம்
யோ.துஸ்யந்தன்.
கிரான் குளம் ஆஞ்சநேயர் ஆலயம்

# மூச்சுப் பயிற்சி -04

**ஏற்கனவே எமது, மின்னிதழில் மூன்று மூச்சுப் பயிற்சிகள் வெளிவந்துள்ளன. அதன் தொடர்ச்சியாக நான்காவது பயிற்சி.**

**பயிற்சி 4.**

முதுகு முள்ளெலும்பு நிமிர்ந்திருக்கத்தக்கதாக சுகாசனம், பத்மாசனம், வஜ்ராசனம் முடியாதவர்கள் இப்பயிற்சியை கதிரையில் இருந்து கூடச் செய்யலாம். ஏற்கனவே குறிப்பிட்ட மூன்று பயிற்சிகளையும் செய்த பின்னர்,இடது கை பெருவிரல் நுனியும் ஆள்காட்டி விரல் நுனியும் இணையும் வண்ணம் வைத்து ஏனைய மூன்று விரல்களையும் நேராக நிமிர்த்தி வைத்துக் கொள்க. இதனை சின்முத்திரை என்று கூறுவார்கள். மன ஒருமைப்பாட்டை அளிக்கக்கூடிய சிறந்த முத்திரை இது. வலது கை ஆட்காட்டி விரலையும் நடு விரலை மடித்து கொள்க.கட்டை விரல் மோதிர விரல் சுண்டு விரல்கள் நிமிர்ந்து நேராக இருக்க வேண்டும்.இதனை நாசிக முத்திரை என்று கூறுவார்கள். இப்பொழுது வலது கைப் பெருவிரலால் வலது மூக்குத் துவாரத்தை மூடிக்கொண்டு இடது மூக்குத் துவாரத்தின் ஊடாக காற்றை முடிந்த அளவு வெளிவிட வேண்டும். பின்னர். பக்கம்) பயன்படுத்தி காற்றை முடிந்தவரை உள்ளே இழுக்கவும். உடனடியாக மோதிர விரலையும் சுண்டு விரலையும் பயன்படுத்தி இடது மூக்குத் துவாரத்தை மூடிக்கொண்டு வலது மூக்குத் துவாரத்தினூடாக மூச்சை மெதுவாக வெளிவிடவும். இடது பக்க மூக்குத் துவாரத்தினால் காற்றை உள்ளிழுத்த நேரத்தைவிட காற்றை வெளிவிடும் நேரம் இரண்டு மடங்காக இருக்க வேண்டும். உதாரணமாக பத்து எண்ணும் அளவு மூச்சை உள்ளிழுத்தால் இருபது எண்ணிக்கை அளவு மெதுவாக காற்றை வெளிவிட வேண்டும். இதனை நாடி சுத்தி என்று யோக நூல் கூறுகிறது. நாடிசுத்தி செய்வதால் உடலில் ரத்த ஓட்டம் சீராக அமையும். எப்பொழுதும் உடல், மனம் உற்சாகமாக இருக்கும். மனம் அமைதி அடையும். ஒற்றைத் தலைவலி நீங்கும்.இரத்த அழுத்தம், மன அழுத்தம், சுவாசப் பையோடு சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும். சாப்பிட்டு நான்கு மணித்தியாலத்தின் பின்னர் இப் பயிற்சியினைச் செய்யவும்.



கலாபூசணம்
யோக ஆச்சாரியார்
கா.சந்திரலிங்கம்

# அன்பின் செயல்பாடுகள் என்ன ?

-தோ.தேவஅருள்-

தன் மகனைப் பிரம்பினால் அடித்துக் திருத்தாதிருக்கிறவன் அவனை வெறுக்கிறான். ஆனால் தன் மகனில் அன்பாயிருக்கிறவனோ அவனைத் தண்டித்துத் திருத்துவதில் கவனமாயிருக்கிறான். நீதிமொழிகள் 13 : 24

நமது பிள்ளைகள் தவறு செய்யும் போது தண்டனை அல்லது அடித்தல் என்பது இன்று சமூகத்தில் ஒரு பிரச்சனையாக உருவெடுக்கின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் சில மாற்றங்கள் நடைபெற்றாலும் இத் தண்டனையின் தன்மை உருமாற்றம் பெறுகின்றது ஆனால் தண்டனையின் பொருள் மாற்றமடையவில்லை. நாம் ஏன் தண்டனை வழங்க வேண்டும் என்ற சிந்தனை சமூகத்தில் ஒரு தடவைக்கு பல தடவை சிந்தனைசெய்யும்போது பல கேள்விகளுக்கு விடை கிடைக்கின்றது. இது சரியான விடையாகத்தான் இருக்கும் என நாம் கருதினாலும் தண்டனை பெற்றவரின் கருத்துக்கள் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நான் இன்று ஒரு வைத்திய அதிகாரியாகயிருக் கிறேன் அதற்கு காரனம் எனது பெற்றோரின் கண்டிப்பு என்று ஒரு வைத்தியர் கூறினால் சமூகததினால் அக்கூற்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதுபோல் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் ஒரு அதிகாரி ஏது கூறினாலும் இக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.என்னை கண்டிப்புடன் எனது பெறறோர் வளக்கவில்லை என்றால் அது யாருடைய தவறுஇ என்ற கருத்தும் சமூக பார்வையில் இருக்கின்றது. ஆகவே நாம் பிள்ளைகளை கண்டிக்கலாமா அல்லது தண்டனை வழங்கலாமா? என்ற பெரிய கேள்விக்கான விடை எம்மவர் மத்தியில் இல்லை. ஏன் தண்டனை வழங்க வேண்டும் எப்படி வழங்க வேண்டும் அதற்கான கருத்துக்களும் இருக்கின்றது தண்டனை வழங்கியதின் பின் சமூகத்தில் யார் நல்ல நிலையில் இருக்கின்றார்கள் என்ற கருத்துகள் எம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றது. கி.மு 10ம் நூற்றாண்டளவில் சாலோமோன் அரசன் எழுதிய இவ் வசனம் இன்றைய காலத்துக்கு மிகவும் பொருத்தமானதாயிருக்கின்றது.

**தொடரும்....**

# ‘ஹிஸ்புல்லா’நிதி நிறுவனங்களுக்கு அமெரிக்கா,கட்டார் கூட்டாகத் தடை

## இலக்குகள் ஆபத்தெனவும் எச்சரிப்பு

வளைகுடா நாடுகளிலுள்ள “ஹிஸ்புல்லா” அமைப்பின் சொத்துக்கள் அனைத்துக்கும் அமெரிக்கா மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் தடைவிதித்துள்ளன. பயங்கரவாத இலக்குகளை ஊக்குவிக்கும் வகையில்,இந்தச் சொத்துக்கள் கையாளப்படுவதாகக் கூறியே,இவ்விரு நாடுகளும் கடந்த புதன்கிழமை இந்தச் சொத்துக்களை தடை செய்துள்ளன.

மத்திய கிழக்கு மற்றும் சர்வதேச அளவில் இயங்கும் “ஷியா”முஸ்லிம் அமைப்புக்களின் இலக்குகளைப் பலப்படுத்த இந்நிதிகள் பயன்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இதனால் “ஹிஸ்புல்லா” அமைப்பின் மிகப் பிரபலமான நிறுவனங்களில் ஒன்றான கட்டாரில் இயங்கும் “அல்டார்” கம்பனியையும் கட்டார் அரசாங்கம் தடை செய்துள்ளது. மட்டுமன்றி,வளைகுடா நாடுகளில் இயங்கும் அலிஅல்பனாகி,அலிலரி, அப்துல் அல்மையிட் ஆகிய பாரிய நிதி நிறுவனங்களும் இந்தத் தடை க்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. லெபனானைத் தளமாகக் கொண்டு செயற்படும் “ஹிஸ்புல்லா”அமைப்பு அந்நாட்டு அரசியலிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. ஈரானுக்கு நெருக்கமான “ஹிஸ்புல்லா”மத்திய கிழக்கில் வல்லரசாக வளரும் ஈரானின் இலட்சியங்களுக்காக உழைப்பதாக அமெரிக்கா கருதுகிறது. இதனால் 1997 ஆம் ஆண்டு,”ஹிஸ்புல்லாவை” பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்தது. எனினும்,இதன் சொத்துக்களுக்கு எந்தத் தடைகளும் விதிக்கப்படாதிருந்தன.

இப்போது,இந்த அமைப்பின் இலக்குகள் ஆபத்தானவை எனக் காரணம் காட்டியுள்ள அமெரிக்கா வும்,கட்டாரும் ஆறு நாடுகளிலுள்ள “ஹிஸ்புல்லா” அமைப்பின் முக்கியஸ்தர்களை, பேசத்தகாதவர் கள் என்றும் அறிவித்துள்ளன. குவைத்,பஹ்ரைன்,சவூதி மற்றும் பலஸ்தீன் ஆகிய நாடுகளிலே இந்த முக்கியஸ்தர்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் உறவைப்பேணுவது, தடை செய்யப்பட்டுள்ள “ஹிஸ்புல்லா” அமைப்பின் நிதி நிறுவனங்களுடன் வர்த்தகங்களில் ஈடுபடுவது என்பவை அமெரிக்கர்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாக,அமெரிக்க ஜனாதிபதி ஜோன்பைடன் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் அறிவிப்பையடுத்து கட்டாரும் இணைந்து கொண்டமை, ஏனைய அரபு நாடுகளுக்கு முன்னுதா ரணமாக அமைய வேண்டுமென, அமெரிக்காவின் வெளிநாட்டமைச்சர் அன்ரனிபிலிங்டன் தெரிவித்தார்.

இதேவேளை,”ஹிஸ்புல்லா”அமைப்பின் 90 வகையான நிதி நிறுவனங்க ளை,2017ஆம் ஆண்டு அடையாளம் கண்டதாக அமெரிக்காவின் வெளிநாட்டுச் சொத்துக்களுக்கான செயலாளர்,அன்றிரா மைக்ஜெனி அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

அமெரிக்காவின்,இந்த அறிவிப்பை நிராகரித்துள்ள ஹிஸ்புல்லா அமைப்பு,பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் கூறுவதற்கு அமெரிக்காவுக்கு எந்த அருகதையும் இல்லை,இஸ்ரேலை எதிர்த்துப் போராடும்”ஹிஸ்புல்லாவின்”இலட்சியம் எந்த வகையில் பயங்கரவாதமாகும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளது. சிரியாவில் யுத்தத்தை தூண்டி, பொருளாதாரத் தடைகளால் சிறுவர்கள் உட்பட இலட்சக் கணக்கான மனித உயிர்களைக் கொல்லும் ஏகாதிபத்தியம்,ஒருபோதும் ஜனநாயகமாகாது என்றும் தெரிவித்தது.

# ரோஹிங்கிய முஸ்லிம் தலைவர் பங்களாதேஷில் சுட்டுக் கொலை



மியனமார்,ரோஹிங்கிய முஸ்லிம்களின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான மொஹிபுல்லா, இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.ரோஹிங்கிய முஸ்லிம் அகதிகள் அதிகமாக வாழும் பங்களாதேஷிலுள்ள முகாமில் இக்கொலைச் சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றது. மாலைத் தொழுகை யை முடித்து விட்டு வருகையில், மொஹிபுல்லா சுட்டுக் கொல்லப்பட்ட தாக பங்களாதேஷ் பொலிஸார் தெரிவித்தனர்.இவரை, உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பொலிஸார், பலத்த பாதுகாப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

இவர்,சுட்டுக் கொல்லப்பட்டதால்,பங்களாதேஷிலுள்ள ஏனைய ரோஹிங்கிய முஸ்லிம் தலைவர்கள் தலைமறைவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. மியன்மாரில்,2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட இராணுவப் புரட்சியி ன் பின்னர்,இதுவரைக்கும் சுமார்,ஏழு இலட்சத்தி முப்பதாயிரம் ரோஹிங்கி ய முஸ்லிம் அகதிகள் அயல் நாடுகளி ல் தஞ்சம் புகுந்தனர்.இவர்களில் அதிகமானோர்,பங்களாதேஷில் தஞ்சமடைந்து முகாம்களில் வாழ்கின்றனர்.

இம்மக்களுக்கு குரல் கொடுக்கவும், மியன்மார் அரசாங்கத்தின் அராஜகத்தை தட்டிக் கேட்கவும்,பங்களாதேஷில் பல அமைப்புக்கள் உருவாகி உள்ளன. பிரபல சட்டத்தரணியான மொஹிபுல்லா இந்த அமைப்புக்கள் ஒன்றின் தலைவராகச் செயற்பட்டவர்.2019 ஆம் ஆண்டு இவரால் ஏற்பாடு செய்யப்பட்ட மியன்மார் அரசுக்கெதி ரான ஆர்ப்பாட்டம் பங்களாதேஷில் இடம்பெற்றது. இதில்,சுமார் இரண்டு இலட்சம் ரோஹிங்கிய அகதிகள் பங்கேற்றதால்,பெருந் தலைவராக அடையாளம் காணப்பட்டார்.பின்னர் இவ்வருடம் (2021) இவரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு பங்களாதேஷ் அரசாங்கம் தடைவிதித்திருந்தது.

# பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி சர்கோஸிக்கு ஒரு வருட சிறை



பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஸிக்கு ஒர வருட சிறைத் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.2007 இல் ஜனாதிபதியாகத் தெரிவான இவர்,இரண்டாம் தடவையாக 2012 இல் போட்டியிட்டவேளை மில்லியன் 22.5 யூரோவை (26மில்லியன் டொலர்) நிதியை மோசடி செய்ததாக கடந்த வியாழக்கிழமை பாரிஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ள சர்கோஸி,சிறைக்கு செல்லப் போவதில்லை எனக் கூறியுள்ளார்.இவரது சட்டத்தரணிகள், இந்த தண்டனையை ஆறுமாதமாகக் குறைப்பதுடன் மீதி,ஆறுமாதத் தண்டப் பணமாக 3750 மில்லியன் (4.354 மில்லியன்) டொலரைத் தண்டப்பணமாகச் செலுத்த உத்தரவிடுமாறு கோரியுள்ளனர்.

சிறைவாசம் அனுபவிக்காவிடினும் ஒரு வருட வீட்டுக் காவலிலாவது இருக்க நேரிடும் என சட்ட ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.2012 இல்,நடந்த தேர்தலில் இவ்வளவு நிதியைச் செலவிட்டும் சர்கோஸி தோல்வியடைந்திருந்தார்.

# பெரு முன்னாள் ஜனாதிபதியை, நாடு கடத்த அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு



அமெரிக்காவில்,கைதாகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த “பெரு” முன்னாள் ஜனாதிபதி அலிஜென்ட்ரோ ரொலிடோவை,நாடு கடத்துமாறு அமெரிக்க நீதிமன்றம் நேற்று செவ்வாய்க் கிழமை தீர்ப்பளித்தது. அமெரிக்கா மற்றும் பெரு ஆகிய நாடுகளுக்கிடையிலான கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தப் பிரகாரம் இந்த தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவர்,பெருவின் ஜனாதிபதியாக கடந்த 2001 முதல் 2006 வரைப் பதவியிலிருந்தபோது,500000 அமெரிக்க டொலர் நிதியை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த மோசடியுடன் பிரான்ஸ் நிறுவன ம் ஒன்றுக்கும் தொடர்பிருந்ததால் அந்நாட்டு அரசியலில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பதவிக்காலம் முடிந்து அமெரிக்காவி ல் வாழப்புறப்பட்ட ரொலிடோ, கலிபோர்னியா மாநிலத்தில் 2016 தொடக்கம் 2018 வரைக்கும் பல்கலைக்கழகமொன்றில் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றி காலத்தைக் கடத்தி வாந்தார். இந்நிலையிலே,2019 இல் அமெரிக்க அரசு இவரைக் கைது செய்தது. எனினும்,இவரை விடுவித்த அமெரிக்கா,தொடர்ந்தும் வீட்டுக் காவலில், கண்காணித்து வருகிறது.

நாடுகடத்தும்படியான நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து, அரசின் உயர்மட்டம் முடிவு செய்யவுள்ளது.தன்மீதான சகல குற்றச்சாட்டுக்களையும் பெரு முன்னாள் ஜனாதிபதி நிராகரித்தும் உள்ளார்.

# இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் பஹ்ரைன் விஜயம் பலஸ்தீன் கவலை.

இஸ்ரேல் வெளிநாட்டு அமைச்சர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பஹ்ரைனுக்கு விஜயம் செய்துள்ளார்.வியாழக்கிழமை தலைநகர் மனாமா சென்றடைந்தார்.இவரை வரவேற்ற பஹ்ரைன் வெளிநாட்டு அமைச்சர், இருதரப்பு உறவுகள் கலந்துரையாடினர். அரபு நாடுகளுடன் மீள உறவுகளை ஆரம்பித்து வரும் இதற்கு முன்னர், ஐககிய அரபு ராச்சியம்,மொரோக்கோ ஆகிய நாடுகளுக்கும்,வெளிநாட்டு அமைச்சரை அனுப்பி வைத்தது. இந்நிலையிலே,நேற்று இவர் பஹ்ரைன் சென்றுள்ளார்.தாயக உரிமையை இஸ்ரேல் மறுப்பதாகவே பலஸ்தீனர்களின் நிலைப்பாடாக உள்ளது.